பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 04 செவ்வாய்க்கிழமை 19.12.2017 கதிர் 44


## கடந்த வியாழனே ஆர்னோல்ட் இராஜினாமா

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ். மாநகரசபைக்குப் போட்டியிடுவதற்காக கடந்த வியாழனன்றே (14 ஆம் திக தியே) இ.ஆனோல்ட் தமது மாகாண சபை உறுப்பினர் பத வியை இராஜினாமாச் செய்யும்

பக்கம் 18

# தமிழரசுக் கட்சிக்குள் குழப்பம்

## மேயர் வேட்பாளர் ஆர்னோல்ட்தான் அடித்துக் கூறுகின்றார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 19

யாழ். மாநகர சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் மேயர் வேட்பாளர் இதுவரை வடக்கு மாகாண சபை உறுப்பினராக இருந்த இ.ஆர்னோல்ட் தான் என நேற்று அடித்துக் கூறினார் கூட்டமைப்பின் உத்தியோக பூர்வ பேச் சாளரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைச் செய லாளருமான எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

பக்கம் 18

## அப்படித் தெரிவு எதுவுமே இல்லை என்கின்றனர் தலைவர், செயலாளர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 19

யாழ். மாநகர சபைக்கான மேயர் வேட்பாளர் என யாரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவு செய் யவே இல்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கமும் நேற்றுத் திட்டவட்டமாக அறி வித்தனர்.

பக்கம் 18

## ஆசனப் பங்கீட்டில் புளொட் அதிருப்தி!

யாழ்ப்பாணம், டிசெ. 19

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான ஆசனப் பங் கீட்டில் புளொட்டுக்கு அநீதி இழைக்கப்பட்டதாகத் தெரிவித்து விட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையே நேற்று இரவு நடந்த கூட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த் தன் வெளியேறினார்.

தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையே யான கூட்டம் யாழ்ப்பா ணம் மாட்டீன் வீதியிலுள்ள தமிழரசுக்கட்சி அலுவலகத்

பக்கம் 18

## ஆசனப் பங்கீட்டில் முடிவின்றி கூட்டமைப்பின் கூட்டம் நிறைவு

யாழ்ப்பாணம், டிசெ. 19

ஆசனப் பங்கீடுகள் தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பங்காளிக் கட்சி களுக்கு இடையே நேற்றி ரவு நடந்த கூட்டம் நிறை வடைந்தது.

வடக்கு – கிழக்கில் மீத முள்ள பெரும்பாலான உள்ளூராட்சிச் சபைக ளுக்கான வேட்பு மனுக் களைத் தயாரிக்கும் பணி யில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஈடுபட்டுள்ளது. வேட்பு மனுக்களைக் கையளிக்கும் இறுதி நாள் நாளை மறுதினம் வியாழக்

பக்கம் 18

## கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கு முண்டியடிக்கின்றனராம் மக்கள்!

### அதனாலேயே பிரச்சினை என்கிறார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், டிசெ. 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட் டியிடப் பலர் போட்டி போட்டுக்கொண்டு ஆர்வத்துடன் முன்வருகின்றனர். இத னால் தான் பிரச்சினை ஏற்படுகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்

பக்கம் 18

## விக்கியின் கருத்துக்கு பதில் கூறமாட்டாராம் சுமந்திரன்

யாழ்ப்பாணம், டிசெ.19

வடமாகாணமுதலமைச் சர் கூறும் கருத்துக்க ளுக்கு ஒரு போதும் பதில் கருத்தைக்கூற மாட்டேன் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினரும் அதன் பேச்சாள ருமான எம்.ஏ. சுமந்திரன் தெரி வித்துள்ளார்.

மேலும் நடைபெற வுள்ள சகல உள்ளூராட்சி சபைகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோகமான வெற்றியை பெறும் எனவும் அவர் கூறினார்.

''உள்ளூராட்சி சபை தேர்தல் நிலைமைகள் குறித்து நேற்று ஊடகவிய லாளர்களைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பி

பக்கம் 18

## சந்திரகுமாரின் கட்சி நேற்று வேட்புமனு



கிளிநொச்சி, டிசெ .19

கிளிநொச்சியில் நேற்று முதலாவது வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள் ளது. முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையி லான சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்

பக்கம் 18

## பெப்ரவரி 10 இல் தேர்தல் வர்த்தமானி டிசெ.26 இல்



கொழும்பு, டிசெ .19

உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்துக்கும் எதிர்வரும் பெப் ரவரி 10ஆம் திகதி தேர் தல் இடம் பெறும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலை வர் மஹிந்த தேசப் பிரிய நேற்று அறிவித்தார்.

248 உள்ளூராட்சி மன்றங்க

பக்கம் 18

## இறுதிப்போரில் சரணடைந்தோர் பட்டியலை உடன் வெளியிடுக!

### இலங்கையிடம் கோருகின்றனர் பிரிட்டன் எம்.பிக்கள்




லண்டன், டிசெ. 19

இலங்கையின் இறுதிக் கட்டப் போரின் போது படையினரிடம் சரணடைந் தவர்களின் பெயர்ப்பட்டி யலை வெளியிடுமாறு, ஜனா திபதி மைத்திரிபால சிறி சேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக்

பக்கம் 18

## சிவசேனை பெயரில் யாழில் சுவரொட்டிகள்




யாழ்ப்பாணம், டிசெ. 19

சைவ வாக்காளர்கள் அனைவரும் சைவமும் தமிழும் காக்கும் வாக்கா

பக்கம் 18

## புலிகளின் தங்கத்தைத் தோண்டிய மூன்று பேர் முல்லைத்தீவில் கைது

### 70 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் பொலிஸாரால் மீட்பு



முல்லைத்தீவு – புதுக்குடியிருப் புப் பகுதியில் தமி ழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தி னால் புதைக்கப் பட்ட தங்க நகைக ளைத் தோண்டிய

பக்கம் 18

# மலேசியப் பிரதமருடன் மைத்திரி நேற்றுப் பேச்சு



கொழும்பு, டிசெ.19

மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள மலேசிய பிரதமர் நஜீப் ரஸாக் மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி அலுவலகத்திற்குச் சென்ற மலேசியப் பிரதமரை ஜனாதிபதி மகிழ்ச்சியுடன் வரவேற்றார். 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு, இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் இந்த வரவேற்பு இடம்பெற்றது.

இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையில் இராஜ தந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு மலேசியப் பிரதமரின் இவ் விஜயம் இடம்பெறுவதுடன், இரு நாடுகளுக்குமிடையி லான நட்புறவை எடுத்துக் காட்டும் வகையில் மலேசியப் பிரதமரை வரவேற்பதற்கான நிகழ்வு ஜனாதிபதி அலு வலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இரு நாடுகளின் தலைவர்களுக்கிடையிலான சுமுக மான சந்திப்பைத் தொடர்ந்து இரு தரப்பு பேச்சுக்கள் இடம்பெற்றன. (ஐ)



# இலங்கைக்குக் கடத்தவிருந்த கஞ்சா தமிழகத்தில் சிக்கியது



சென்னை, டிசெ.19

இராமநாதபுரம் அருகில் நொச்சியூரணி கடற்கரைப் பகுதியில் இலங்கைக்குக் கடத்த இருந்த கஞ்சா பறி முதல் செய்யப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட இந்த கஞ்சா சுமார் 150 கிலோ நிறையுடையது எனவும் தெரி விக்கப்படுகின்றது. கடத்த லில் ஈடுபட்ட கார்த்தி என்ப வரைப் பிடித்து இராமநாத புரம் சுங்கத்துறையினர் விசா ரணை மேற்கொண்டு வரு கின்றனர்.

அத்துடன், கஞ்சா கடத்தல் தொடர்பில் மேலும் மூன்று பேரைத் தேடும் நடவடிக்கை யில் சுங்கத்துறையினர் ஈடு பட்டுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

நீண்டகாலமாக இந்தியா வில் இருந்து இலங்கைக்குக் கடல் வழியாகக் கஞ்சா கடத் தும் சம்பவம் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்ற நிலை யில் அவை இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்படுவது குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிக ளில் இருந்து கொண்டு செல் லப்படும் கஞ்சா இடைநடு வில் பொலிஸாரின் சோத னையில் கைப்பற்றப்படுவ தும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அத்தியாவசியப் பொருள்கள் விரைவில் விலை குறைப்பு

கொழும்பு, டிசெ.19

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலைகளைக் குறைக்க சதோச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, நாடளாவிய ரீதியிலுள்ள 372 சதோச நிலையங்களில் குறித்த பொருள்களை எந்தவித பற்றாக்குறையும் இன்றிப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

வெள்ளை நாடு ஒரு கிலோ 65 ரூபாவில் இருந்து 62 ரூபாவாகவும், நாட்டரிசி ஒரு கிலோ 74 ரூபா வில் இருந்து 70 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 78 ரூபாவாக இருந்த பொன்னிச் சம்பா அரிசி ஒரு கிலோ 71 ரூபாவாகக் குறைக் கப்பட்டுள்ளதோடு, 107 ரூபாவாக இருந்த ஒரு கிலோ சீனி 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப் படவுள்ளது.

மேலும், பெரிய வெங்காயம் ஒரு கிலோ 152 ரூபாவில் இருந்து 135ரூபா ஆகவும், ரின் மீன் (425 கிராம்) 149 ரூபாவில் இருந்து 127 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பஸ்மதி ஒரு கிலோ 132 ரூபாவாக வும், வெள்ளைப்பூடு ஒரு கிலோ 250 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. (ஐ)

# அமைச்சுக் கடமைகளை பொறுப்பேற்றார் ஸ்ரீயானி

அம்பாறை தேர்தல் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஸ்ரீயானி விஜேவிக் கிரம, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் புதிய இரா ஜாங்க அமைச்சராக, நேற்று பொறுப்பேற் றுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

உத்தியோகபூர்வமாகத்தனது கடமை களை நேற்று முற்பகல் 10 மணிக்கு, அமைச்சு அலுவலகத்தில் பொறுப்பேற் றுள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை, ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவுக்கு ஆதரவு வழங்கும் நோக்கில், ஒன்றிணைந்த எதிரணிப் பக்கத்திலிருந்து விலகி அரசுடன் இணைந்து கொள்வதாக இவர் அறிவித்திருந்தார்.

அதனைத்தொடர்ந்து, கடந்தவெள்ளிக் கிழமை காலை ஜனாதிபதி செயலகத் தில் ஜனாதிபதியிடமிருந்து இராஜாங்க அமைச்சர் பதவிக்கான தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இராஜாங்க அமைச்சராக சில காலம் பதவி வகித்த புத்தளம் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பியங்கர ஜயரத்ன, ஒன்றிணைந்த எதிரணிக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்து, அப்பதவி யிலிருந்து விலகிச் சென்றிருந்த நிலை யில், அவ்விடத்திற்கு ஏற்பட்டிருந்த வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட் டுள்ளார். (ஐ)


## "வழங்குநரைப் பதிவு செய்தல் - 2018" கேள்வி தொடர்பான அறிவித்தல்

13.11.2017ஆம் திகதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2018ஆம் ஆண்டிற்கான வழங்குநரைப் பதிவு செய்தல் சம்பந்தமான கேள்வி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்ட பதிவிற்கான இறுதித் திகதி 15.12.2017 ஆனது 31.12. 2017 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

தலைவர்,
கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்


# ஆலய உண்டியல் திருடியவர் விபத்தில் சிக்கியதால் மாட்டினார்

கொழும்பு, டிசெ. 19

தம்புள்ளை பிரதேசத்தில் உள்ள ஆலயம் ஒன்றின் உண்டியலை உடைத்துப் பணத்தை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்ற ஒருவர், தம்புள்ளை - கண்டலம வீதியில் விபத்தில் சிக்கியுள்ளார்.

விபத்தில் காயமடைந்த நபர் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் எனத் தம்புள்ளை பொலிஸார் தெரி வித்தனர்.

தம்புள்ளை - கண்டலம வீதியில் கார் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. ஓட்டோவில் பயணித்த நபரே காயமடைந்துள்ளார்.

தம்புள்ளை பொலிஸார் ஓட்டோ வைச் சோதனையிட்டபோது அதில் உரப் பை ஒன்றில் சில்லறைக் காசு கள் மற்றும் ரூபா நாணயத்தாள்கள் இருந்துள்ளன.

இது குறித்து பொலிஸாருக்குச் சந் தேகம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத் துச் சந்தேகநபரிடம் பொலிஸார் விசாரணை நடத்தியபோது வீட்டில் இருந்த உண்டியலை உடைத்துப் பணத்தை எடுத்து வந்தேன் எனத் முதலில் கூறியுள்ளார்.

இதனை உறுதிப்படுத்த பொலிஸார் சந்தேக நபரின் வீட்டுக்கு அதிகாரி களை அனுப்பி விசாரித்துள்ளனர்.



அப்போது அது பொய் எனத் தெரிய வந்துள்ளது.

மறுபடியும் விசாரணை நடத்திய போது கலேவலை பிரதேசத்தில் தனது தந்தை ஆலயம் ஒன்றை நடத்தி வருகின்றார் எனவும் அங்கி ருந்த பணத்தைத் தனக்குக் கொடுத் தார் எனவும் சந்தேக நபர் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து பொலிஸார் பிரதேசத்தில் உள்ள விகாரைகள் மற்றும் ஆலயங் களின் நிலைமைகள் தொடர்பாகத் தேடியுள்ளனர்.

அப்போது கண்டலம குளத்துக்கு அருகில் இருக்கும் ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர், சந்தேக நபர், பொலிஸாரிடம் உண்மையைக் கூறியுள்ளார். (ஐ)

# யாழ். மாநகர சபை முதன்மை வேட்பாளர் தெரிவு இந்துக்கள் மனம் நோகாதபடி இடம்பெறவேண்டும்

## - யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை வலியுறுத்து -

யாழ்ப்பாணம், டிசெ.19

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் வேட்பாளர் தெரிவின் போது சகல கட்சிகளும்இந்துக்களின்மனம்கோணாதபடி நடந்து கொள்ள வேண்டும் என இந்து சமய பேரவை வலியுறுத்தியுள்ளது.

யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளர் தெரிவு தொடர்பில் யாழ். இந்து சமயப் பேரவை வெளியிட்ட அறிக்கையிலேயேஇவ்வாறுதெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

எமது நாடு அந்நியர் ஆட்சி யில் இருந்ததிலிருந்து இன்றுவரைநாம்பல் வேறுபட்ட துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.

அந்நியர் ஆட்சியின்போது எமது மொழி, மத, கலாசார விழு மியங்கள் அழிக்கப்பட்டமையோடுஎமதுசகோதரர்களை அந்நிய மதத்திற்கு மாற்றி எமக்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தினர்.

அவர்களின் ஆட்சிக் காலத்தில் எமது புராதன ஆலயங்கள் பல அழிக்கப்பட்டு அவற்றைக்கொண்டுயாழ்.கோட்டையை நிறுவியதாக அறியக் கிடைக் கிறது. குறிப்பாக நல்லூர் கந்தசுவாமிகோயில் எத்தனைமுறைஅழிக்கப்பட்டதென்பது அனைவருக்கும் தெரிந்த விட யம்.

கோட்டைப் புனரமைப்பின் போது இதற்கான ஆதாரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவை ஒருபுறம் இருக்க, இன் றைய அரசியல் சூழலில் தமிழ் மக்கள் ஒரே அணியில் நின்று தமது உரிமைகளை வென் றெடுக்க வேண்டியது மிக அவசியமாகஉணரப்படுகிறது.இந்தஒற்றுமை உள்ளூராட்சிச் சபைத் தேர்தலால் சிதறடிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் இப்போது உருவாகியுள்ளது. எமது மன்னர்களின் அடையாளமாக திகழ்வது நல்லூர் பிரதேசமே. இது யாழ். மாநகர சபைஎல்லைக்குள் அமைவதால்இதன் முக்கியத்துவம் எம்மைப் பொறுத்த வரையில் வேண்டப் படுகிறது. இன்று பல்வேறு கட்சி கள் தமிழ்ப் பிரதேசத்தில் தமது வேட்பாளர்களை நிறுத்தி வரு கின்றன. இவர்கள் அனை வரும் யாழ். மாநகர சபைக்கான வேட்பாளர் நிய மனத்தில் இந்துக்களின் மனம் நோகாத படி கண்டிப்பாக நடந்து கொள்வது அவசியமாகிறது.

அனைத்து மதங்களும் தமிழ்ப் பிர தேசத்தில்சுதந்திரமாகதமதுசெயற்பாடு களை செய்ய வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.

இங்குள்ளகிறிஸ்தவர்களோ,முஸ்லிம் களோ வேறு நாட்டில் இருந்து வந்தவர் கள் அல்லர். இவர்கள் மூதாதையர்கள் தூய இந்துக்களாக இருந்து சிவபூஜா காரியங்களையும் ஏனைய எமது மத அனுஷ்டானங்களையும் சிவாகமங் களையும் கிரமமாகப் பேணியவர்கள். எனினும் இந்நாட்டிற்கு புகுந்த அந்நியர் கள்எமதுசகோதரர்களைமதம்மாற்றிய தோடு அவர்களது அடையாளத்தையே அழித்துவிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இன்றும் தமிழ் வாழ்கிறதென்று உலகிற்குப்பறைசாற்ற வேண்டின் அது சைவத்தமிழ்ப்பண்பாட் டின் மூலமே நிறைவேற முடியும்.

இதனை எனது அன்புக்குரியஏனைய மத சகோ தரர்கள் நன்குணர்வார்கள். ஆகையால் யாழ்.மாநகர சபை முதல் வர் வேட்பாளர் மனதில் இந்துப் பிரதிநிதி ஒருவரை நியமனம் செய்வதற்கு அரசி யல் கட்சிகளும் குறிப்பாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும்முனைகிறபோது அதற்கு ஆதரவாக ஏனையமதத்தவர்கள் தமது பரிபூரணமான ஒத்துழைப்பை நல்க வேண்டும். - என்றுள்ளது.

# கட்சியைப் பார்த்துத்தான் மக்கள் தமது வாக்குகளை அளிக்க வேண்டும்

## முதல்வர் விக்னேஸ்வரனுக்கு சிறிதரன் பதிலடி

- எஸ்.நிதர்ஷன் -

"வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவே தேர்தலில் போட்டியிட்டார். அவர் தனி நபராக போட்டியிட்டிருக்க வில்லை. எனவே மக்கள் தாம் ஏற்கும் கட்சி சார்ந்த வர்களையே தேர்வு செய்ய வேண்டும். தனிநபர்களை அல்ல" - இப்படி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிசபைதேர்தல்நிலைமைகள்தொடர்பாக நேற்றுக்காலைநாடாளுமன்ற உறுப்பினர்சி.சிறிதரன் தமது இல்லத்தில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் ஊடக வியலாளர்களைச்சந்தித்தமுதலமைச்சர்சி.வீ.விக்னேஸ் வரன், கட்சிகளைப் பார்க்காமல் தமக்கு சிறந்த சேவை யாற்ற கூடிய தனிநபர்களை மக்கள் தேர்வு செய்ய வேண்டும் எனக் கூறியிருந்தார்.

சிறிதரனுடனான சந்திப்பில் இது தொடர்பாக ஊடக வியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் கூறியவை வருமாறு -

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தலை சாதா ரணமாகப் பார்க்க இயலாது. மக்கள் தொடர்ச்சியாகத் தேர்தல்களில் வழங்கி வரும் ஆணையை வலுப்படுத் தும் தேர்தலாக இந்தத் தேர்தல் அமையும்.

இதில் கட்சிகளைப் பார்க்காமல் ஆள்களை பார்த்து வாக்களியுங்கள் என கூறப்படும் கருத்துக்கள் கருத்துக் களே அல்ல. மக்கள் கட்சிகள் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாகவே ஆள்களுக்கு வாக்களிக்கிறார்கள்.

குறிப்பாக முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடாகவே தேர்தலில் போட்டியிட் டார்.தனிநபராகதேர்தலில்போட்டியிடவில்லை.மாகாண சபையை மத்திய அரசாங்கம் சுயமாக இயங்க அனு மதிக்கவில்லைஎனக்கடந்தசிலதினங்களுக்கு முன்னை ரும் கூட முதலமைச்சர் கூறினார் என ஊடகங்களில் வெளியான செய்திகள் ஊடாகப் பார்த்தேன்.

அவ்வாறிருக்கையில், மாகாண சபைகளின் கீழ் இயங்கும் குட்டி அரசாங்கமான உள்ளூராட்சி சபை களில் தனி நபர்கள் மக்களுக்கு என்ன சேவையை செய்ய முடியும்? ஒரு தனிநபர் ஒரு வீதியைப் போட இய லுமா? தண்ணீரைப் பெற்று கொடுக்க இயலுமா? எனவே இவ்வாறான கருத்துக்களில் மக்கள் கருத் தூன்றக் கூடாது.

மக்கள் தாம் ஏற்றுகொள்ளும் கட்சிகளுக்கும் அதன் வேட்பாளர்களுக்கும் தங்கள் ஆதரவை வழங்க வேண்டும் - எனக் கூறினார்.

மேலும் யாழ். மாநகர சபை மேயர் வேட்பாளர் தொடர்பாகஎழுந்துள்ளசர்ச்சைதொடர்பில்கேட்டபோது தமது கட்சிரீதியாகத்தீர்மானம்எடுக்கப்பட்டதாகத்தான் அறியவில்லை என்றார் அவர்.

சொலமன் சிறில், பத்திரிகையாளர் வித்தியாதரன் மற் றும் மாகாணசபை உறுப்பினர்களான ஆர்னோல்ட், ஜெயசேகரம் போன்றவர்களின் பெயர்கள் பேசப்படு கின்றன. இவர்களில் யாரை மேயர் வேட்பாளராக நிய மிப்பது என்பது தொடர்பான உத்தியோகபூர்வ தீர்மா னம் எடுக்கப்பட்டதாக இல்லை.

இந்நிலையில் யாரை மேயர் வேட்பாளராக நியமித் தாலும் வேறு வேலைகள் இல்லாமல் 100 வீதம் மக் களுக்கு சேவையாற்ற - கூடிய - இனத்தின் விடியலை நோக்கி உளமார நகர கூடிய ஒருவரை மக்கள் தேர்வு செய்யவேண்டும்.

அதனோடு யாழ். மாநகரம் என்பது தமிழர்களின் அடையாளம். வெளிநாடுகளில் இருந்து வருகிறவர்கள் யாழ். மாநகரைப் பார்கின்றபோது அவர்கள் யாழ். மாவட் டத்தின் கலாசாரம், பண்பாடு உள்ளிட்ட அடையாளங் களைகாண்கிறார்கள். அதனைப்பாதுகாக்கும்தன்மை கொண்டவரை மக்கள் தேர்வு செய்ய வேண்டும். - என மேலும் தெரிவித்தார் சி.சிறிதரன் எம்.பி. (உ)

# 45 ஆயிரம் பெண்கள் பாலியல் தொழிலில்!

## வைத்தியத்துறை 'திடுக்' தகவல்

நாடு முழுவதிலும் 45,000 பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இவர்கள் நாளொன்றுக்கு சுமார் 3 இலட்சம் ஆண் களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர் எனவும் குருநாகல் வைத்தியசாலையின் பாலின நோய் எய்ட்ஸ் ஒழிப்பு பிரிவின் விசேட வைத்தியர் எச்.ஏ.சீ.டபிள்யு. ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேசஎயிட்ஸ்தினத்தை அண்மித்ததாக குருநாகல் இளைஞர் பௌத்த சங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"இலங்கையிலுள்ள ஓரினச் சேர்க்கையாளர்களின் எண்ணிக்கை 7 இலட்சம் என வைத்திய ஆய்வுகள் தெரி வித்தாலும், 25 இலட்சம் இலங்கையர்கள் ஓரினச் சேர்க் கையில் ஈடுபடுகிறார்கள் என ஓரினச் சேர்க்கை அமைப்பு தெரிவித்துள்ளது" - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

15 தொடக்கம் 24 வயது வரையான இளைஞர்கள் பாலியல் தொற்று தொடர்பான நோய்களுக்கு உள்ளாகி யிருக்கின்றனர் எனவும், இந்த வயதினருக்குத் தெளிவு படுத்தும் புதிய வேலைத்திட்டங்களை குருநாகல் மாவட் டத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் வைத்தி யர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தட்டுவன் கொட்டி விபத்தில் இரு இளைஞர்கள் சாவு

## மோட்டார் சைக்கிள்கள் மோதல்



கிளிநொச்சி, டிசெ.19

'ஏ9' கண்டி வீதியில், ஆனையிறவு தட்டுவன் கொட் டிப் பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள் ளனர். மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் இரண்டு நேருக்கு நேர் மோதிக் கொண்டமையினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் தட்டுவன் கொட்டிப் பகுதியைச் சேர்ந்த 29 வயதான இளைஞர் ஒருவரும், கரவெட்டியை சேர்ந்த ஒருவரும் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

# மது போதையில் மோ.சைக்கிளை செலுத்திய மாது கைதானார்

கொழும்பு, டிசெ.19

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய மாது ஒருவரை தங்கொடுவ பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

கடுகெந்த பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு ஒலி எழுப்பியும் அதனைப் பொருட்படுத்தாது அந்த பெண் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றுள்ளார்.

இந்நிலையில், அவரை இடை மறித்து பொலிஸார் சோதனைக் குட் படுத்திய போது, மது அருந்தியிருந்தமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து அந்தப் பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சமய சந்தர்ப்பமும் தருணமும்

நேற்று இப்பத்தியில் தொட்ட விடயத்தை இன்றும் தொட்டுச் செல்ல விரும்புகிறோம்.

தனக்காகத் திரண்டு வந்த இளைஞர்களுக்கு வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் கொடுத்த அறிவுரை ஒன்றுதான்.

*"தருணம் பார்த்துக் காத்திருங்கள். காலம் வெகுதொலைவில் இல்லை."* - என்பதுதான் அந்த அறிவுரை.

அது, தமிழ் இளைஞர்களுக்கான அறிவுரை மட்டுமல்ல. எல்லோருக்கும் பொதுவானதுதான்.

அனைத்துக் கட்சிகளும், அனைத்துத் தரப்பினரும் பார்த்திருப்பது அந்தத் தருணத்துக்கான சரியான சந்தர்ப்பத்துக்குத்தான்.

எந்தத் தருணத்தில் - எந்தச் சந்தர்ப்பத்தில் - தமது தீர்மானத்தை எடுத்துச் செயற்படுத்துவது என்பதுதான் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு கட்சிக்கும், ஒவ்வொரு தரப்புக்கும் முக்கியமானது.

தருணத்தையும் சந்தர்ப்பத்தையும் தீர்மானிப்பதில்தான் இலக்கின் வெற்றியும் தோல்வியும் தங்கியிருக்கின்றன என்பது எப்போதும் அனுபவப் பாடமாகும்.

தன்னுடைய அரசியல் செல்வாக்கையும், வலுவையும் விஸ்தரித்து, தனது கட்சியை மேலும் பலமாக ஊன்ற வைப்பதற்கு சரியான சமய சந்தர்ப்பம் - அல்லது தருணம் - இந்தத் தேர்தல்தான் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி கருதிச் செயற்படுகின்றது.

அதுவும் தங்களின் எடுபிடிகளை - ஆள்களை - உள்ளூராட்சிப் பதவியில் அமர்த்துவது தனிப்பட்ட முறையில் தமக்கு வலுச் சேர்க்கும் என்று கருதி அதற்கான சமய சந்தர்ப்பமாக இந்தத் தேர்தலைப் பயன்படுத்த முனைகின்றனர் தமிழரசுக் கட்சியின் சில தலைவர்கள்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் போல சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் கருத்துக் கூறிச் செயற்படக் கூடிய திறமையாளர்கள் உள்ளூராட்சியில் முக்கிய பதவிகளுக்கு வந்துவிட்டால், தங்களுக்கு தலையாட்டி, தலைசாய்த்து, சேவித்துச் செயற்படமாட்டார்களோ என்று கருதும் அந்தத் தலைவர்கள், அதற்காக தலையாட்டி பொம்மைகளைப் பதவிக்குத் தேடுகின்றமையையும் காணமுடிகின்றது.

தமக்குத் தலையாட்டும் பொம்மைகளைப் பதவியில் இருத்துவதை உறுதிப்படுத்தும் தருணமாக - சந்தர்ப்பமாக - இந்தத் தேர்தலைப் பயன்படுத்த முனைகின்றனர் அவர்கள்.

முதல்வர் விக்னேஸ்வரன் கூட சமய சந்தர்ப்பமும், தருணமும் பார்த்துக் காத்திருக்கின்றார் என்பதை நேற்று முன்தினம் அவர் வெளிப்படுத்திய கருத்து எடுத்தியம்புகின்றது.

இப்போதைய தமிழரின் அரசியல் குழப்பங்களில் அவர் சிக்கத் தயாரில்லை என்பது அவரது அண்மைக்காலக் கருத்துக்களில் வெளிப்படையாகப் பிரதிபலித்து வருகின்றமையை நாம் அவதானிக்க முடிகின்றது.

ஆனால், கூட்டமைப்பை விட்டு வெளிப்படையாக வந்து, புதிய அரசியல் தலைமை ஒன்றை முன்னெடுப்பதற்கான சமய சந்தர்ப்பம் இதுதான் என அவரோடு தமிழ் மக்கள் பேரவையில் இணைந்து பணியாற்றிய கட்சிகள் எதிர்பார்த்தன; நம்பின.

ஆனால், அந்த சமய சந்தர்ப்பத்தை உரிய தருணமாகக் கருத அவர் மறுத்து விட்டார். அதனால் அந்தக் கட்சிகள் ஏமாந்தன. அவை எதிர்பார்த்த அந்த சமய சந்தர்ப்பமும் அல்லது தருணமும் அதை ஒட்டிய முயற்சிகளும் சறுக்கி விட்டன.

அதேபோல, கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சிக்கு எதிராகக் கெம்பி எழுவதற்கு ரெலோவும், புளொட்டும் தீர்மானித்த சமய சந்தர்ப்பமும் கூட பிழைத்துத்தான் போய்விட்டது. சோடாப் புட்டியைத்திறந்ததும் 'காஸ்' சீறுகின்றமைபோல, ஆசனப் பங்கீட்டுக்காகக் கொளுவிக் கொண்டு அறிக்கைப் பிரகடனம் செய்த அத்தரப்புகள் அந்த வேகத்திலேயே அடங்கிப் போய், பங்கீட்டுக்கு இணங்கின.

சறுக்கிப் போன சமய சந்தர்ப்பத்தை விட்டு விட்டு, தேர்தலுக்குப் பின்னர் மீளவும் சமய சந்தர்ப்பம் - தருணம் - கிடைக்கும், ஒரு கை பார்ப்போம் என்று அக்கட்சிகள் அடுத்த தருணத்துக்குக் காத்திருக்கின்றன என்று கேள்வி.

முதல்வர் விக்னேஸ்வரன் கூட விரைந்து ஒரு தருணத்துக்குப் பார்த்திருக்கின்றார் என்று நம்பமுடியும். நேற்று முன்தினம் தாம் விடுத்த அறிவிப்பில் *"நாம் எதிர்பார்க்கும் எமது நீண்ட நாள் பிரச்சினைகளை நிலையாகத் தீர்க்கும் தீர்வு எட்டப்படாது என்பதே எனது கணிப்பு. ஆகவே தருணம் பார்த்திருங்கள்."* - என்று அறை கூவல் விடுத்திருக்கின்றார் அவர்.

தமிழரசுக் கட்சி உள்ளிட்ட கூட்டமைப்பின் ஆதரவோடு வெளிப்பட்டிருக்கும் புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையின் மீதான சர்வஜன வாக்கெடுப்பாக - தமிழ் மக்களின் கருத்துக் கணிப்பாக - இந்த உள்ளூராட்சித் தேர்தலைப் பயன்படுத்த - இந்தத் தருணத்தை அதற்குப் பிரயோகிக்க - அவர் களமிறங்குவார் எனத் தெரிகின்றது.

'தீர்வு சரிவராது, ஆகவே தருணம் பார்த்திருங்கள்' என்று அவர் விடுக்கும் அழைப்பு தற்போதைய தீர்வு யோசனைத் திட்டத்தை தமிழ் மக்கள் முன்னால் எடுத்து வந்து அனைப் பிய்த்து உதறும் எண்ணத்தின் பிரதிபலிப்பாகவே படுகின்றது. அந்த வேலையை இந்தத் தேர்தலுக்கு இடையில் முன்னெடுக்கவும் அவர் விழைகின்றார் போலும்.

அவர் தேர்ந்தெடுக்கும் இந்தத் தருணம் சரியானதா, உசிதமானதா என்பதைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டக்கூடும்.

---

# அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்

# இசைவேள்வி 'ஸ்ரீ ராம நாமகானாமிர்தம்'

## ஈழத்து இசைக்கலைஞர்களுடன் தமிழகக் கலைஞர்களும்



பிரியா சகோதரிகள்

அகில இலங்கைக் கம்பன் கழகம் தனது கொழும்புக் கிளைக் கழகத்தினூடாக ''ஸ்ரீ ராம நாமகானாமிர்தம்'' எனும் பெயரிலான இசை வேள்வியை 1997 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் நடத்தி வருகிறது. இவ் இசைவேள்வியில் நம் நாட்டு இசைக் கலைஞர்களோடு புகழ்பெற்ற தமிழ்நாட்டு இசைக் கலைஞர்கள் பலரும் வருடந் தோறும் சிறப்பித்து வருகின்றனர். சென்னையில் மார்கழி மாதத்தில் நடத்தப்படும் இசைவிழாக்களுக்கு நிகராக இவ் விழா நடைபெற்று ஈழத்து இசை ரசிகர்களைத் திருப்தி செய்து வருகிறது. இப்புகழ்பெற்ற விழாக்களின் வரிசையில் 2017 ஆம் ஆண்டிற்கான இசைவேள்வியை அகில இலங்கைக் கம்பன் கழகம் இம்முறையும் கொழும்பில் நடத்தவுள்ளது. எதிர்வரும் 30,31, 2018 ஜனவரி 01,02 சனி, ஞாயிறு திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தினமும் மாலை 5.30 மணிக்கு இந்த இசைவேள்வி நடைபெறவுள்ளது.

### இசை அரங்கும், இசைப்பேரரங்கும்

இவ்வாண்டும் விழா நிகழ்ச்சிகள் இசையரங்கு, இசைப் பேரரங்கு என இரு பிரிவுகளாக நடத்தப்பட வுள்ளன. இசை அரங்கில் நம் நாட்டு பிரபல கலைஞர்களும், இசைப் பேரரங்கில் தமிழ்நாட்டின் பிரபல கலைஞர்களும் கலந்துகொண்டு இசைவிருந்து அளிக்கவுள்ளனர்.

### இசை அரங்கில் பங்கேற்கும் நம் நாட்டு வித்துவான்கள்

நிகழவுள்ள இசை அரங்கின் முதல் நாளில் அ. ஆரூரனும், இரண்டாம் நாளில் இசைச் சகோதரர்கள் அ.அமிர்தலோஜன், அ. அமிர்த சிந்துஜன் ஆகியோரும், மூன்றாம் நாளில்



நெய்வேலி சந்தானகோபாலன்

திருமதி தாரணி ராஜ்குமார், நான்காம் நாளில் செல்வி பரமேஸ்வரி கணேசன் இசைவிருந்து அளிக்கவுள்ளனர். செல்வி பாக்கியலஷ்மி நடராஜா, எஸ்.கோபிதாஸ், அ.ஜெயராமன், எஸ்.திபாகர், பிரம்மஸ்ரீ.வி ரமணா, க.கஜன், திவ்யரூபசர்மா, ரட்ணம் ரட்ணதுரை, பி. சியாம் கிருஷ்ணா, வி.பிரபா, கே.ரவிசங்கர், நா.சிவசுந்தரசர்மா, என்.மாதவன், சி. செந்தூரன் ஆகியோர் இவ் இசைக்கச்சேரிகளுக்கு அணி இசை வழங்கவுள்ளனர்.

### கலந்து கொள்ளும் பிரபல தமிழக வித்துவான்கள்

இவ்விழாவின் இசைப் பேரரங்குகளில் முதல் நாளான எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை, தமிழகத்தைச் சேர்ந்த பிரபல பாடகரான திரு.என். சந்தான கோபாலன் அவர்களதும், இரண்டாம் நாளன்று தமிழகத்தின் புகழ்பெற்ற பாடகிகளான பிரியா சகோதரிகளும், மூன்றாம் நாளன்று உலகப்புகழ் பெற்ற மூத்த பாடகி பம்பாய்ஜெயஸ்ரீயும், நான்காம் நாளன்று தமிழகத்தைச் சேர்ந்த பிரபல இளைய தலைமுறைப் பாடகர் அபிஷேக்குமாரும் கலந்து கொள்ளும் இசைக் கச்சேரிகள் நடைபெறவுள்ளன. தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல வயலின் வித்துவான் களான எச்.என்.பாஸ்கர், சேர்தலை சிவகுமார் ஆகியோரும், பிரபல மிருதங்க வித்துவான்களான சாயி கிரிதர், சுமேஸ் நாராயணன் ஆகியோரும், பிரபல கட வித்துவானான எஸ். கிருஷ்ணா ஸ்ரீராம் ஆகியோரும் இந் நிகழ்வுகளில் அணி இசைக்கலைஞர்களாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

### கலந்து கொள்ளும் பிரமுகர்கள்

இவ்விழாவின் முதல் நாள் நிகழ்வுகளை ஓவர்சீஸ் ஓட்டோ மோட்டிவ் பிரைவேட் லிமிட்டட் உரிமையாளர் க.இராமச்சந்திரன் தம்பதியரும், இரண்டாம் நாள் நிகழ்வுகளை மாருதி மணி எக்ஸ்சேன்ஜ் நிறுவன பணிப்பாளர் க.ரவீந்திரன் தம்பதியரும், மூன்றாம் நாள் சிரேஷ்ட சட்டத் தரணி கலாநிதி ஜே.



அபிஷேக் ரகுராம்

எம்.சுவாமிநாதன் தம்பதியரும், நான்காம்நாள் வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலரி அதிபர் ஏ.பி. ஜெயராசா தம்ப தியரும் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கவுள்ளனர். முதல் நாள் விழாவில் கொழும்புக் கம்பன் கழகத் தலைவர் தெ. ஈஸ்வரனும், ஓய்வு பெற்ற நீதியரசர் ஜெ.விஸ்வநாதன் அவர்களும் கலந்துகொண்டு தொடக்கவுரையையும் தலைமையுரையையும் ஆற்றவுள்ளனர். தொடரும் நாள்களில் நிர்த்தனா கலாமன்ற அதிபர் ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதர்ஷனும், நாட்டிய கலாமந்திர அதிபர் ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வ ரனும், நிர்மலாஞ்சலி நடனப்பள்ளி அதிபர் ஸ்ரீமதி நிர்மலா ஜோனும் தலைமையுரை நிகழ்த்தவுள்ளனர்.

### மறைந்த பெருமக்களின் பெயரில் அரங்கங்கள்

இவ்வாண்டு விழாவில் நம் நாட்டில் இசை வளர்ச்சிக்காக பணியாற்றி இசைப் பெருமையை நிறுவிப் புகழ் கொண்ட மறைந்த பெருங் கலைஞர்களான சங்கீத வித்துவான் அமரர் சரஸ்வதி பாக்கியராஜா, சட்டத்தரணி டபிள்யு.எஸ்.செந்தில்நாதன், மிருதங்க வித்துவான் அமரர் கே. சந்தானகிருஷ்ணன், மிருதங்க வித்துவான் ஏ.கணேஷசர்மா ஆகியோரது பெயர்களால் இசை அரங்குகள் அமைக்கப்படவுள்ளன.

### மனிதநேய மாமணி அமரர் வி.கயிலாசபிள்ளை அவர்களின் படத்திறப்பு

இவ்விழாவில் கம்பன்கழகப் பணிகளுக்கு பெருந்துணை செய்தவரும் அறப்பணிகளுக்கு இல்லையெனாது அள்ளிக் கொடுத்தவரும் திருக்கேதீஸ்வர திருப்பணியை முன்னின்று நடத்திய வருமாகிய வள்ளல் மனிதநேய மாமணி வி.கயிலாச பிள்ளை அவர்களின் உருவப்படம் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

### அனைவரும் வருக

கட்டணங்கள் ஏதும் இன்றி நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் கலந்து பயனடைய வேண்டுமென அனைத்து இசை ரசிகர்களையும் கம்பன் கழகம் அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

இந்நிகழ்வுகள் பற்றிய மேலதிக விவரங்களை அறிய விரும்புவோர் 077 293 5509 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

---

## நாளை

20.12.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : பூராடம் பி.ப. 1.02 வரை
திதி : துதியை பி.ப 4.33 வரை
சுபநேரம் : 4.54 – 6.24 வரை
இராகுகாலம்: 12.24 – 1.54 வரை

# காணாமற்போனோரின் தகவல் திரட்டும் படிவம் ஆங்கிலத்தில்

## சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் விசனம்

கொழும்பு, டிசெ. 19

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தகவல்களைச் சேகரிப்பதற்காக வடக்கு, கிழக்கில் ஆங்கிலத்தில் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம சேவகர்களுக்கு வழங்கப்பட்டுக் கிராமங்கள் முழுவதும் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

நான்கு பக்கங்களைக் கொண்ட இந்த விண்ணப்பப் படிவங்கள் ஆங்கிலத்தில் காணப்படுவதால் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

மட்டக்களப்பு, ஏறாவூர் பற்று மற்றும் மண்முனைப்பற்று போன்ற பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த விண்ணப்பப் படிவங்கள் ஆங்கிலத்தில் நிரப்பப்பட்டுள்ளன.

இருப்பினும் குறித்த படிவத்தில் கையொப்பம் மாத்திரமே தாங்கள் இடுகின்றோம் எனவும் மிகுதி அனைத்தையும் கிராம சேவகரே நிரப்புகின்றார் எனவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில் எதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனத் தங்களுக்கு குழப்பமாக உள்ளது எனவும் சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழர்கள் செறிந்து வாழும் மற்றும் அதிகளவிலான காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்று தெரிந்தும் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கை வேதனைக்குரியது என மக்கள் கூறியுள்ளனர். (ஐ)

## தேங்காய் விலையில் மாற்றம்



பொது மக்களுக்கு நியாய விலையில் தேங்காயை வழங்கும் அரசின் வேலைத் திட்டத்தால் தேங்காய் விலையில் திடீர் மாற்றம் ஏற்படவுள்ளது.

சந்தையில் 75 ரூபாவுக்கு மேலதிகமாக தேங்காயை விற்பனை செய்ய முடியாது என்று தெங்கு உற்பத்திச் சபையின் தலைவர் கபில யகந்தாவல தெரிவித்தார்.

தேங்காய்க்கு ஆகக்கூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர்கள் கூடுதலான இலாபத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேங்காயின் விலையை அதிகரித்துள்ளனர், இதுவே தேங்காய் விலை அதிகரிப்பிற்குக் காரணம் என்றும் தெங்கு உற்பத்திச்சபையின் தலைவர் கபில யகந்தாவல கூறினார்.

இதேவேளை, அதிக விலைக்கு தேங்காயை விற்பனை செய்யும் வர்த்தகர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுமென்று நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது. (ஐ)

## தேர்தல் விதி மீறல் தொடர்பில் இதுவரை ஆறு முறைப்பாடுகள்

கொழும்பு, டிசெ. 19

பொலிஸ் தலைமையகத்தின் முறைப்பாட்டுப் பிரிவுக்கு நேற்று முன்தினம் வரை உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பிலான 6 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன்குணசேகர தெரிவித்துள்ளார்.

ஆரச்சிகட்டு, கம்பஹா, அம்பாறை, மொரகஹஹேன மற்றும் வெலிகேபொல ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வெலிகேபொல பிரதேசத்தில் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள பேச்சாளர், ஏனைய முறைப்பாடுகள் பனர் கிழித் தல், போலி ஒப்பம் இட்டு வேட்பாளர் பட்டியல் தயாரித்தல் என்பன தொடர்பில் காணப்படுகின்றன எனவும் அறிவித்துள்ளார்.

டிசெம்பர் 15 ஆம் திகதி முதல் இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும், கடந்த 16 ஆம் திகதி வரை எந்த வொரு முறைப்பாடும் பதிவாகியிருக்க வில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கொழும்பில் நண்டு சாப்பிட்ட மலேசியப் பிரதமர் நஜீப் ரஸாக்




கொழும்பு, டிசெ. 19

இலங்கைக்கு மூன்று நாள்கள் உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டுள்ள மலேசியப் பிரதமர் மொஹட் நஜீப் ரஸாக், தமது தூதுக் குழுவினருடன் இராப்போசனம் அருந்தியுள்ளார்.

இந்த இராப்போசனம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதுடன், இது குறித்து அவர் ''கொழும்பில் நண்டுச் சாப்பாடு'' என்று மலாய் மொழியில் டுவிட்டரில் கூறியுள்ளார்.

இதேவேளை, இது தொடர்பான புகைப்படம் ஒன்றையும் மலேசியப் பிரதமர் வெளியிட்டுள்ளார். இந்த நிகழ்வில், மலேசிய பிரதமருடன், அமைச்சர் கயந்த கருணாதிலக்கவும் பங்கேற்றுள்ளார். (ஐ)

## போலி வங்கி அட்டைகளை பயன்படுத்திப் பண மோசடி

### மக்களுக்குப் பொலிஸார் எச்சரிக்கை

இலங்கையில் போலி கடன் அட்டைகளைப் பயன்படுத்திப் பல பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற பணம் மோசடி தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மோசடிச் சம்பவம் தொடர்பில் மூவர் குற்ற விசாரணை திணைக் களத்தால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

இந்த மோசடியாளர்கள் வாடகைக்குப் பெற்றுக் கொண்ட வானில் சென்று கடன் அட்டைகளைப் பயன் படுத்திப் பணம் மற்றும் பொருள்களை அபகரிக்கின்றனர் அவர்கள் வங்கி அதிகாரிகள் போல் சென்றே இந்த மோசடியில் ஈடுபடுகின்றனர்.

வங்கிகளுக்கு வெளியே இருக்கும் மோசடியாளர்கள் பணம் பெற்றுக் கொள்ளவரும் வாடிக்கையாளர்களைத் தவறான வழியில் அனுப்பி அவர்களிடம் உள்ள கடன் அட்டைகளை சோதனையிட வேண்டும் எனக் கூறிப் பெற்றுக் கொள்கின்றார்கள். குறித்த வங்கி ஏ.ரி.எம். இயந்திரத்தில் சில வேலைப்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும், ஸ்கிமர் டிவைஸ் என்ற சிறிய இயந்திரம் ஒன்றைப் பயன்படுத்தி கடன் அட்டைகளின் தகவல்களைப் பெற்றுக் கொள்வதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களைப் பயன்படுத்தி போலிக் கடன் அட்டைகள் தயாரிக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடி நடவடிக்கையின் மூலம் 7 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

யாராவது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வங்கி கடன் அட்டையை வழங்குமாறு கோரினால் வழங்க வேண்டாம் எனப் பொலிஸார் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# விமான நிறுவனத்தை அழிக்கவுள்ளார் ரணில்

## விமான ஓட்டிகளின் சங்கம் குற்றச்சாட்டு

விமான நிறுவனத்தை அழிவுக்கு உள்ளாக்குவதற்கு தனது நண்பனான சரித்த ரத்வத்தையின் மகனான சுரேன் ரத்வத்தையை பிரதான நிறைவேற்று அதிகாரியாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார் என விமான ஓட்டிகளின் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

புதிய முகாமைத்துவத்தின் கீழ் ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் மீள் புனரமைக்கப்பட்டுள்ளமை குறித்து விமான நிறுவன தொழிற்சங்கங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அதன்படி, தற்போது நிலவும் முகாமைத்துவத்தின் கீழ் நிறுவனத்தைப் புனரமைத்தால் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாது போகும் என விமான ஓட்டிகளின் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, தனது நண்பரைச் சிங்கப்பூரிலிருந்து வரவழைத்து மத்திய வங்கிக்குத் தலைவராக்கியமையால் அது அழிவுக்குள்ளானதைப் போல, தற்போது விமான நிறுவனத்தை அழிவுக்கு உள்ளாக்குவதற்கு தனது நண்பனான சரித்த ரத்வத்தையின் மகனான சுரேன் ரத்வத்தையைப் பிரதான நிறைவேற்று அதிகாரியாக நியமித்துள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் நியமிக்கப்பட்டிருப்பதற்கான காரணம் நட்புத் தான் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது ஒரு புறமிருக்க, இலங்கை விமான நிறுவனத்தின் புனரமைப்பிற்காக அரச அதிகாரிகள் உள்ளடங்கிய குழுவொன்று தற்போது நியமிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நியமிக்கப்பட்ட இந்தக் குழுவின் அறிக்கை டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி நிறைவு செய்யப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

விமானநிறுவனத்தை இலாபமீட்டும் நிலைக்குக் கொண்டு செல்வதற்கான எட்டு பிரேரணைகள் அடங்கிய கடிதமொன்றை ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் சுதந்திர சேவையாளர் சங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

நட்டம் ஏற்படும் விமானப் பயணங்களை இயன்றளவு குறைத்து உச்ச பட்ச இலாபத்தைப் பெற்றுக் கொள்ளுதல், எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கான நடைமுறை சாத்தியமிகு திட்டங்களை வகுத்தல் மற்றும் சிவில் விமான சேவை தொடர்பான அறிவு சார் குழுவொன்றை அமைத்தல் உள்ளிட்டவை அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# சர்வதேச சித்திரப் போட்டி; மட்டு. மாணவர் முதலிடம்

20 ஆவது சர்வதேச சித்திரப் போட்டியில் இவ்வாண்டு 5 வயது தொடக்கம் 7 வயதுப் பிரிவில் இலங்கைக்கு முதலிடம் கிடைத்துள்ளது.

ஜெனீவாவைத் தளமாகக் கொண்ட சர்வதேச சமாதான ஆதாரங்களுக்கான அமைப்பு வருடாந்தம் உலகளாவிய ரீதியில் சித்திரப் போட்டிகளை நடத்தி வருகிறது.

இவ்வாண்டு பூமியில் சமாதானம் நிலவும் எனும் தலைப்பில் சித்திரப் போட்டி நடைபெற்றது. இதில் 5 வயது தொடக்கம் 7 வயது பிரிவில் முதலாவது இடம் இலங்கைக்குக் கிடைத்துள் ளது.

மட்டக்களப்பு கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி பயிலும் செல்வன் நகுலேஸ்வரன் கேமலக்ஷன் எனும் மாணவனே முதலிடத் தைப் பெற்றுள்ளார்.



உலகளாவிய ரீதியில் பங்குபற்றிய பல்லாயிரக்கணக்கான சித்திரங்களுக்குள் இவரது சித்திரம் முதலாமிடத் தைப் பெற்றுள்ளமை இலங்கைக்கும் மட்டக்களப்புக்கும் பெருமையை தேடித் தந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய செல்வி ந. சஞ்சனா- கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம், செல்வி ச.தம்மிக்கா -கோட்டை முனை கனிஷ்ட வித்தியாலயம், செல்வி ந. தருணிக்ஷ - புனித சிசிலியா பெண்கள் பாடசாலை, செல்வி சி.சஷ்ஷினி ஆகிய நான்கு மாணவியருக்கு பங்கு பற்றுதலுக்கான சான்றிதழ்களும் கிடைத்திருக் கின்றமை குறிப்பிடத்தக்கது.



FIRST - Kaemalaxshan Naguleshwaran
Age 6 - Sri Lanka

(ப)

# சட்டவிரோத மதுபான உற்பத்தி; காட்டில் பொலிஸார் முற்றுகை



மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நெடுஞ்சேனையில் உள்ள காட்டுப் பகுதியில் சட்ட விரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்டிருந்த குழுவினரை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்டிருந்த மூவர் தப்பி ஓடியுள்ளனர் என வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி என்.ரி.நசீர் கூறியுள்ளார்.

இந்த முற்றுகையின்போது, மதுபான உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 540 லீற்றர் கோடா மற்றும் மதுபான உற்பத்தி உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, தப்பிச் சென்றுள்ள சந்தேக நபர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனஎனவவுணதீவுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி என். ரி.நசீர் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் 19 வயதிற்குள் கர்ப்பம் தரிக்கும் வீதம் அதிகம்

மட்டக்களப்பில் இளவயதுத் திருமண வீதம் அதிகரித்துள்ளது என ஆய்வுகள் புலப்படுத்து கின்றன என ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி கலையரசி துரைராசசிங்கம் கூறியுள்ளார்.

அத்துடன், 19 வயதிற்குள் கர்ப்பம் தரித்தலே இளவயது திருமணம் எனப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏறாவூர் அல் ஜுப்ரியா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இலவச வைத்திய முகாமில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கூறுகையில் கிழக்கு மாகாணத்தில் 12.5 என்ற வீதத்தில் இளவயதுத் திருமணம் அதிகமாகி இருப்பது ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் முஸ்லிம் மக்கள் வாழும் பின்தங்கிய கிராமப் புறங்களில் இளவயதுத் திருமண வீதம் அதிகமாகவுள்ளது எனவும் ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

இந்த இள வயதெல்லையில் திருமணம் செய்தல் என்பது தாய், சேய் மற்றும் சமூக ஆரோக்கியத்திற்குக் கேடானது.

உடலும், உள்ளமும் முதிர்ச்சியடையாத கட்டிளமைக் கால கட்டத்தில் திருமணம் செய்வித்து குடும்பப் பொறுப்பையும், பொருளாதாரச் சுமையையும் சிறுமிகள் மீது சுமத்தினால் அதனை அவர்களால் தாங்க முடியாது.

அத்துடன், திருமணமானவுடன் குடும்பத்தினராலும், உறவினர்களாலும் குழந்தை பெற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவதும், ஆரோக்கியமற்ற இளவயதுக் கருத்தரித்தலை ஊக்குவிக்கின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வடிகானுக்குள் இருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, செங்கலடி பாடசாலை வீதியிலுள்ள வடிகானுக்குள் இருந்து குடும்பஸ்தரொருவரின் சடலம், நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது என ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொம்மாதுறை திருவள்ளுவர் வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை விமலநாதன் (வயது 37) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நபர், நேற்றுமுன்தினம் பிற்பகல் வேளை வீட்டிலிருந்து சைக்கிளில் சென்றுள்ள நிலையில், நற்று காலை 6 மணியளவில் செங்கலடி பாடசாலை வீதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கூலித் தொழிலாளியான இவர், மத்திய கிழக்கு நாடொன்றில் தொழில் புரிந்து வந்த நிலையில், கடந்த மாதம் நாடு திருப்பியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர்ப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# சிமெந்துக்கல் தலையில் வீழ்ந்து ஆபத்தான நிலையில் இளைஞன்

*மட்டக்களப்புடிசெ19*

மட்டக்களப்பில் மூன்றாவது அடுக்கு மாடியிலிருந்து சிமெந்துக் கல் உச்சந்தலையில் விழுந்ததில் கட்டடத் தொழிலாளி ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது எனத் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தில் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருந்த பிபிலை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய அரவிந்த் என்ற இளைஞனே இவ்வாறு படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது, படுகாயமடைந்த இளைஞன் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர்என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ப)

# தமிழ் மக்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுப்பார்கள்

## இதில் ஐயம் ஏதுமில்லை என்கிறார் கருணாகரம்

அரசியல் ஞானம் பெற்ற தமிழ் மக்கள் தேர்தலை எதிர்காலத் தீர்வுடன் ஒப்பிட்டு உறுதியான நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்பதில் எந்தவித ஐயப்பாடுகளுமில்லை எனதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சிச் சபைகள் தொடர்பான பங்கீடுகள் தொடர்பில் தமிழரசுக்கட்சிக்கும் ரெலோவுக்கும் இடையில் இருந்த முரண்பாடுகள் நீக்கப்பட்டுள்ளமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை பெரிய வெற்றியைப்பெறும். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த14ஆம்திகதிநான்குசபைகளுக்கான வேட்பு மனுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையளித்திருக்கின்றது.

ஏறாவூர்ப்பற்று, ஏறாவூர் நகரம், கோறளைப்பற்று, மண்முனைப் பற்று ஆகிய நான்கு சபைகளுக்கான வேட்புமனுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாக்கல் செய்ததுடன் காத்தான்குடி தவிர்ந்த ஏனைய மட்டக்களப்பு மாவட்டத்தின் நான்கு சபைகளுக்கான கட்டுப்பணத்தை நாங்கள் செலுத்தியிருக்கின்றோம்.

கடந்த சில வாரங்களாக உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாக பல குழப்பங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்தமை வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எங்களுக்குள் எந்தவிதமான குழப்பங்களும் இருக்கவில்லை. பல தடவைகள் பல சுற்றுப் பேச்சுகள் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மாறிமாறி நடைபெற்றன. கருத்து முரண்பாடுகள் அனைத்தும் இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந் தன் காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில் இறுதி முடிவு காணப்பட்டதுடன், நாங்கள் ஓர் உடன்பாட்டிற்கு வந்து மூன்று கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் கையொப்பமிட்டு தீர்மானங்களை எடுத்திருக்கின் றோம்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் மத்தியிலிருந்து ஓரங்கட்டிதாங்கள் அந்த அதிகாரத்திற்கு வரவேண்டும் என நினைக்கின்ற சக்திகளே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் கூட்டாட்சி நடத்துவதாக பொய்ப் பிரசாரம் செய்து வருகிறன என கோவிந்தன் கருணாகரம் மேலும் தெரிவித் துள் ளார்.

(ப)

# அமெ. கோரிக்கையை நிராகரித்தது இலங்கை

## ஜெருசலேம் விவகாரத்தில் விடாப்பிடி



கொழும்பு, டிசெ. 19

இஸ்ரேலின் தலைநகராக ஜெருச லேமை அங்கீகரிப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருப்ப தாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இலங்கையின் இந்தநிலைப்பாட்டை அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் பிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தியுள்ளார்.

ஜெருசலேமை இஸ்ரேலின் தலை நகராக அங்கீகரிப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தி ருந்தார். அமெரிக்காவின் இந்த முடி வுக்கு உலக நாடுகள் எதிர்ப்பை வெளி யிட்டு வருகின்றன.

இந்தநிலையில், பலஸ்தீனம் தொடர் பான இலங்கையின் கொள்கையில் மாற்றமில்லை என்றும், அமெரிக்கா வின் நிலைப்பாட்டுக்கு ஆதரவளிக்க முடியாது என்றும் இலங்கை அரசு கூறியிருந்தது.

இஸ்ரேலின் தலைநகராக டெல் அவிவ் நகரையே இலங்கை ஏற்றுக் கொண்டுள்ளது என்றும், அங்கிருந்து இலங்கைத் தூதரகத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படாது என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியி ருந்தார்.

இந்த நிலையில், பிரதமரின் செய லகத்துக்குச் சென்ற அமெரிக்க தூது வர் அதுல் கெசாப், ஜெருசலேம் விவ காரத்தில் அமெரிக்காவின் நிலைப் பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

எனினும், ஜெருசலேமை இஸ்ரே லின் தலைநகராக அங்கீகரிக்கும் அமெரிக்காவின் முடிவு மத்திய கிழக் கின் அமைதிக்கு ஆபத்தாக அமையும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைத் தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றவும் அவர் மறுப்பை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இந்த நிலைப்பாடு அமெரிக்கத் தூதுவருக்கு அதிருப் தியை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப் படுகிறது.

வழக்கமாக இலங்கை அரசின் அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களு டனான சந்திப்புக் குறித்து கீச்சகப் பதிவுகளை இடும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், பிரதமருட னான சந்திப்பு குறித்த எந்தத் தகவ லை யும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்



யாழ்ப்பாணம், டிசெ. 19

சுவிஸ் நாட்டிலிருந்து செயற்படும் தமிழர் நிறுவனமான சுவிஸ் ரென்ட் ஏ கார் நிறுவனத் தின் பணிப்பாளர் முருகுப்பிள்ளை விஜயகுமா ரின் 43 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 'வாகீசம்' இணையத்தின் ஏற்பாட்டில் உடுவில் கோட்ட முன்பள்ளிகளைச் சேர்ந்த 43 மாண வர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங் கப்பட்டன.


சுன்னாகம் வரியப்புலம் மகாமாரி அம்மன் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகம் ஜனசக்தி முன்பள்ளி ஆசிரியரும், உடுவில் கோட்ட முன்பள்ளி இணைப்பாளருமான ஜெ.வடிவாம்பிகை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உடுவில் கோட்ட முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கிருபானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கினார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகச் சுவிஸ் ரென்ட் ஏ கார் நிறுவனம் சார்பில் இணைப்பா ளராக துரைராசா சத்தியேந்திரா கலந்துகொண் டார்.

(ஐ)

# ரயில் கடவைக் கம்பத்துடன் மோதிய மோட்டார் சைக்கிள்





## இளைஞர் படுகாயம்

வவுனியா, டிசெ. 19

வவுனியா, ஈரப்பெரிய குளம் பகுதியில் உள்ள ரயில் கடவைக் கம்பத் துடன் மோதி மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக் குள்ளானது. அதில் பயணித்த இளைஞர் படுகாய மடைந்துள்ளார் என ஈரப்பெரிய குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வவுனியா, ஈரப்பெரியகுளம், அவுசப்பிட்டிய பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து ரயில் பாதையில் இருந்த கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது தூக்கி வீசப்பட்ட மோட்டார் சைக்கிள் இரண்டாக உடைந்து முன்னே சென்ற காருடன்மோதி மீண்டும் விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 25 வயதுடைய இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

(ஐ-100)

# நாச்சியார் ஆற்றுப் பாலம் புதிதாக நிர்மாணிப்பு

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பகுதியில் அமை ந்துள்ள விவசாய நிலங்களுக்குள் செல் கின்ற குருவிச்சை மற்றும் நாச்சியார் ஆற்றுக்கான பாலம் 35 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட குருவிச்சை நாச்சியார் ஆற்றுக்கான பாலம் இன்மையால் கடந்த காலங்களில் விவசாயிகள் விவசாய நிலங்களுக்கான விவசாய உள்ளீடுகளை கொண்டு செல்வதிலும், அறுவடை செய்கின்ற விளைபொருள் களைக் கொண்டு வருவதிலும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்த நிலையில் அந்த ஆற்றுக்குப் பாலம் ஒன்றை அமைத்துத்தருமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் பல்வேறு தரப்புக்களிடமும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரனின் கோரிக்கையை ஏற்று வட மாகாணசபையின் முன்னாள் விவசாய அ மைச்சர் பொ.ஐங்கரநேசன் சிபாரிசுக்கு அமை வாக திட்டம் முன்மொழியப்பட்டு 35 லட்சம் ரூபா செலவில் பாலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

ஐ

# இலங்கையில் பாவித்த ஹெலிகளை கைவிட்டது இந்திய விமானப்படை

இலங்கையில் 'ஒப்பரேஷன் பவான்' நடவடிக்கைக்காக இந்தியப் படையி னர் பயன்படுத்திய ரஷ்ய தயாரிப்பான எம்.ஐ.-8 ஹெலிகள் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

1972ஆம் ஆண்டு தொடக்கம், கடந்த 45 ஆண்டுகளாக ஹெலிகளை இந்திய விமானப்படை பயன்படுத்தி வந்தது.

இந்த ஹெலிகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் பெங்களூர் ஜலகங்கா விமானப்படைத் தளத்தில் நடந்த நிகழ் வுடன் சேவையில் இருந்து நீக்கப் பட்டன.

இந்திய விமானப்படை 1972ஆம் ஆண்டு தொடக்கம் 107 ஹெலிகளைப் பயன்படுத்தி வந்தது.

இலங்கையில் இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைகளின் போதும், கார்கில் போரின் போதும் இந்த ஹெ லிகள் முக்கிய பங்காற்றின.

இந்திய - இலங்கை உடன்பாடு கையெழுத்திடப்படுவதற்கு முன்ன தாக, 1987ஆம் ஆண்டு, ஜூலை மாதம், சுதுமலையில் தரையிறங்கிய இந்திய விமானப்படையின் எம்.ஐ-8 உலங்குவானூர்தி, விடுதலைப் புலி



களின் தலைவர் வே.பிரபாகரன் உள் ளிட்ட முக்கிய பிரமுகர்களைச் சென் னைக்கு அழைத்துச் சென்றிருந்தது.

1987ஆம் ஆண்டு, 'ஒப்பரேஷன் பவான்' நடவடிக்கையின் ஒரு கட்ட மாக, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் எம்.ஐ-8 ஹெலிகள் மூலம் தரையிறக்கப்பட்ட பரா கொமாண் டோக்களின் அணியொன்று விடுத லைப் புலிகளால் முற்றாக அழிக்கப்பட் டது.

அந்த அணியைச் சேர்ந்த கோர்க்கா சிங் என்ற இந்தியப் படைச் சிப்பாய் மாத்திரமே உயிர் தப்பியிருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஹெலிகள் இந்திய விமானப் படையினால் முக்கிய - மிக முக்கிய பிரமுகர்களின் பயணங்களுக்கும் பயன் படுத்தப்பட்டன.

(ஐ)

# வாக்களிக்காதோருக்குத் தண்டம்; இலங்கையிலும் சட்டம் தேவை

சில வெளிநாடுகளில் உள்ளதைப்போன்று வாக்களிக்காதவர்கள் தண்டப்பணம் செலுத்தும் சட்ட ரீதியிலான முறையொன்றை இலங்கையிலும் அறிமுகப்படுத்தவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் மேலதிக ஆணையாளர் எம்.எம்.மொகமட் தெரிவித்தார்.

மொத்த வாக்காளர்களுள் 60 சதவீதமானவர்களே வாக்களிக்கின்றனர். ஆனால், மொத்த வாக்காளர்களும் வாக்களிப்பார்கள் என்ற அடிப்படையில் தேர்தல்கள் ஆணைக்குழு செலவு செய்கின்றது. இதனால், வீண் செலவு ஏற்படுகின்றது. எனவே, அவ்வாறு வாக்களிக்காதவர்களிடம் இந்தப் பணத்தை அறவிடுவதற்கான சட்ட ஏற்பாடு ஒன்று அவசியம் என்று மொகமட் கூறினார்.

ஆஸ்திரேலியா உள்ளிட்ட சில நாடுகளில் இவ்வாறான சட்டங்கள் இருக்கின்றன. அதுபோன்று இலங்கையில் வாக்காளர்களுக்குத் தண்டனை வழங்கும் சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (ஐ)

## தினசரி ராசி பலன் 19.12.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித்திங்கள் 4 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிரதமைத்திதி பகல் 2.39மணி வரை பின்னர் துவிதீயை நட்சத்திரம்- மூலம் பகல் 10.09 பின்னர் பூராடம். அமிர்தசித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *மாலை 3.00 மணி முதல் 04.26மணி வரை*

**சுபநேரம்** -*பகல் 11.01மணி முதல் 12.29 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *திதி இல்லை*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *பூராடம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** உயர்வான நாள். வருமானம் உயரும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழிலில் உயர்வு கிடைக்கும். சமூக அந்தஸ்து உயரும். உழைப்பிற்கேற்ப ஊதியமும், தேவைகளைப் பூர்த்தி செய்ய கூடியதாகவும் இருக்கும்.

**ரிஷபம்** : சஞ்சலமான நாள். பணவரவு குறையும். ஆடம்பரச்செலவு உண்டாகும். தந்தைக்கு உடல் நலப் பாதிப்பு உண்டாகும். வரவுக்குமீறிய செலவு வந்து கடன்படும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வாகன வசதிகளால் புதியசெலவுகள் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் சுமாராக இருப்பார்கள். வியாபாரம் ஏற்றமும், இறக்கமுமாக நடக்கும்.

**கடகம்:** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். தொழில் துரித வளர்ச்சி அடையும். விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் சேரும் வாய்ப்பு உண்டாகும்.

**சிம்மம்:** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டாகும். படித்தவர்களுக்கு திறமைக்கேற்ப வேலை கிடைக்கும்.

**கன்னி** :சலனம் மிகுந்த நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்ப அமைதி குன்றும். வியாபாரத்தில் தொழிலாளர்கள் ஒத்துழைப்பு குறைவால் வருமானம் பாதிப்புறும்.

**துலாம்** :மத்திமமான நாள். பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். வரவுக்கு மீறிய செலவு அதிகரிக்கும். உத்தியோகப் பணியில் அதிகக் கவனம் எடுக்கவேண்டும்.

**விருச்சிகம்** :அதிஷ்டமான நாள்.நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்ப உறவில் அன்பும், பண்பும் நிறைந்து காணப்படும். சிலருக்கு அரச வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும்.

**தனுசு**: நன்மையான நாள். பணவரவு திருப்தியைத் தரும். குடும்பத்தில் அன் யோன்யம் அதிகரிக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளும் வியாபார விருத்தியும் உண்டாகும்.

**மகரம்:** யோசனையான நாள். பணவரவு குறையும். எந்த விஷயமும் சரிவர முடிவு எடுக்க முடியாத தடுமாற்றம் உண்டாகும். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் காணப்படும்.

**கும்பம்**: நன்மையான நாள். பொருளாதரம் வளர்ச்சி அடையும். எடுத்த காரியங்கள் வெற்றியும், வருமான விருத்தியும் உண்டாகும். பணி செய்யும் இடங்களில் எதிரிகள் தொல்லையிலிருந்து விடுதலை கிடைக்கும்.

**மீனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதம் உண்டாகும். தொழில் பிரயாசை அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பாதிப்படையும்.

**சந்திராட்டமநாள்: கார்த்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள் ரோகிணி மிருகசீரியம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.**

# வவுனியா இளைஞர்களின் முன்மாதிரியான செயல்



வவுனியா, டிசெ.19

வவுனியா தாண்டிக்குளம் கிராம சேவகர் பிரிவில் தமிழ் தேசிய இளைஞர் கழகத்தால் கிராம மக்களின் வெள்ளப் பாதிப்பை கட்டுப்படுத்தும் முகமாகப் பிரதான வடிகால் அகலமாக்கும் செயற்றிட்டத்தை மக்களுக்குக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

மக்கள் பங்களிப்புடன், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து இளைஞர் நாடாளுமன்றத்திற்கு ஒதுக்குகின்ற நிதியின் கீழ் அபிவிருத்தி வேலைத்திட்டம் நாடாளாவிய ரீதியில் இளைஞர் கழகங்கள் ஊடாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், வவுனியா மாவட்டத்தில் 22 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு. காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா நகரசபையின் முன்னாள் உப நகர பிதா க.சந்திரகுலசிங்கம்(மோகன்) பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு பிரதான வடிகால் அகலமாக்கும் செயற்றிட்டத்தை மக்களுக்குக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் வவுனியா வடக்கு கல்வி வலய ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் ரகுபதி, வவுனியா மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ.கேசவன், ஐயனார் விளையாட்டுக் கழக தலைவர் பே.அனோஜன், நிஸ்கோ இணைப்பாளரி.அமுதராஜ், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி திருமதி ந.சோதிமதி, சிவில் பாதுகாப்புக் குழுச் செயலாளர் சோதிநாதன், நாகதம்பி ரான் ஆலயப் பரிபாலன சபை யின் தலைவர் கணேஷ், திருநாவற்குளப் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள், கழக உறுப்பினர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். (ஐ)

# அரச வங்கி ஆள்சேர்ப்பில் தமிழர்கள் புறக்கணிப்பு!

மட்டக்களப்பு, டிசெ.19

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச வங்கியான பிராந்திய அபிவிருத்தி வங்கிக் கிளைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக 13 பேர், அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்களில் ஒருவரே தமிழர். மற்றையவர்கள் அனைவருமே பெரும்பான்மையினர். ஆள்சேர்ப்பில் நிதிஅமைச்சு பெரும் பிழையைச் செய்துள்ளது என, இப்பகுதி இளைஞர், யுவதிகள், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜீ.ஸ்ரீநேசனை, அவரது அலுவலகத்தில் சந்தித்து முறையிட்டனர்.

அதுமட்டுமன்றி, இந்த நியமனங்கள் யாவும் தேர்தல் பிரகடனப்படுத்துவதற்கு முன்பதாக திடுதிப்பென்று நடந்துள்ளதெனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட அனைவரும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிராந்திய வங்கிக் கிளைகளில் பயிற்சி பெற்று வருகிறார்கள். இவர்களில் ஒருவரே களுவாஞ்சிக் குடியைச் சேர்ந்த தமிழராவார். மற்றவர்கள் அனைவருமே கம்பஹா பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையினர். இது ஏற்றுக் கொள்ளத் தக்க செயல் அல்ல என அவர்கள் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

## மூன்று கைத்துப்பாக்கிகளுடன் 2 முன்னாள் சிப்பாய்கள் கைது

ஹோமாகம பகுதியில் சட்டவிரோதமான முறையில் கைத்துப்பாக்கிகளை வைத்திருந்த முன்னாள் இராணுவத்தினர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து 3 கைத்துப்பாக்கிகள் மற்றும் 34 தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதை பொலிஸார் தெரிவித்தனர்.

43 மற்றும் 32 வயதுடைய இருவரே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இராணுவத்தில் பணியாற்றியவர்கள் எனவும், அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரி விக்கப்பட்டது. (ஐ)

## ஜெய்ப்பூர் நிறுவனத்துக்கு 26 முதல் விடுமுறை

யாழ்ப்பாணம் டிசெ.19

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் எதிர்வரும் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தனது வருடாந்த விடுமுறைக்காக மூடப்பட்டிருக்கும். என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்த விடுமுறை முடிவுற்று எதிர்வரும் முதல் நிறுவனத்தின் செயற்பாடுகள் வழமை போன்று இடம்பெறும் என்று அதன் தலைவர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (இ)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பு மனுக்கள் சூறை

ஹெரனைப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் வேட்பு மனுக்கள் துபகரிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகச் சுதந்திரக் கட்சியால் தயாரிக்கப்பட்ட வேட்புமனுக்களே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளன. வேட்புமனுக்களைக் சூறையாடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் என்பது தெரிய வந்துள்ளது.

தமது பெயர் வேட்புமனுப் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை என்ற காரணத்தால் இவ்வாறு வேட்புமனு தயாரிக்கப்பட்டிருந்த ஆவணத்தைக் அபகரிக்கப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப் படுகிறது. வேட்பு மனு குறித்த ஆவணத்தைப் பேணிப் பாதுகாத்து வந்த நபரைத் தாக்கி இந்த ஆவணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# இனிய தமிழில் பேசி ஆங்கிலேய நீதிபதியை திணறடித்த ஆறுமுக நாவலர்

தமிழும் சைவமும் என் இரண்டு கண்கள் அவ்விரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன் அவை வாழப் பணி புரிவதே என் வாழ்வின் குறிக்கோள் என்று சொல்லி அதன் வழி வாழ்ந்தவர் ஆறுமுகநாவலர்.

ஓலைச்சுவடியில் இருந்த தமிழ், கரையான்களாலும் செல்களாலும் அழிவதைக் கண்டு மனம் வருத்தப்பட்ட ஆறுமுக நாவலர், அதைப் பதிப்பிக்கும் பணியில் களமிறங்கினார். ஓலைச் சுவடியில் இருந்த தமிழை அப்படியே பதிப்பிக்காமல், அதனைப் பல பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, அதன் பிறகே பதிப்பித்தார். அவர் பதிப்பித்த நூல்களில் அனைத்திலும் அதாவது, பக்க எண்கள் கூடத் தமிழ் எண்களாகவே இருக்கும். அதுபோல, பதிப்பித்த ஆண்டும் மாதமும் தமிழிலேயே இருக்கும். இப்படி அவர் பதிப்பித்த நூல்கள் 46. எழுதிய நூல்கள் 24.

தமிழுக்காகத் தம் இறுதிமூச்சு வரை வாழ்ந்த ஆறுமுகநாவலர், கல்வியை விரும்பும் ஏழைக் குழந்தைகளுக்குப் புத்தகங்கள் வாங்கிக் கொடுப்பது பெரும் புண்ணியம் என்று வலியுறுத்தினார். இது குறித்து 'புத்தகம்' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில், கல்வியை விரும்பிக் கற்கும் மாணவர்களுக்கும், கல்வியிலே நன்கு தேர்ச்சியடைந்த ஆசிரியர்களுக்கும், இனி கற்க முயல்பவர்களுமாகிய எல்லாருக்கும் புத்தகங்கள் இன்றியமையாதவை. புத்தகங்கள் இன்றிக் கற்கப் புகுவோர் கோலின்றி நடக்கக் கருதிய குருடர்போல் ஆவர். யாதாயினும் ஒரு தொழிலைச் செய்பவனுக்கு அதனைச் செய்வதற்குரிய ஆயுதம் இன்றியமையாததுபோல, கல்வி கற்கும் மாணவர்களுக்கு அதனைக் கற்றலுக்குரிய புத்தகம் இன்றியமையாததேயாகும். ஆதலால், கல்வியை விரும்பிக் கற்கும் மாணவர்கள் புத்தகங்களைச் சம்பாதித்து, அவற்றைக் கிழிக்காமலும் அழுக்குப் படியாமலும், கெட்டுப் போகாமலும் பாதுகாத்து வைத்துப் படித்தல் வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ் மட்டுமல்லாது அன்றைய காலத்திலேயே நன்கு ஆங்கிலப் புலமை பெற்றிருந்த ஆறுமுக நாவலர், ஒருமுறை சென்னைக் கடற்கரையில் நடந்து சென்றபோது, அருகிலிருந்த குடிசையில் தீப் பிடித்து விட்டது. இந்த வழக்குச் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வேண்டித் தன் சீடர்களுடன் நீதி மன்றத்துக்குச் சென்றிருந்தார். அங்கு நீதிபதியிடம், தன் தரப்பு விஷயங்களை ஆறுமுகநாவலர் ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பித்தார். இவர் ஆங்கிலத்தில் பேசுவதைக் கண்டு பொறாமைப்பட்ட அந்த ஆங்கிலேய நீதிபதி... ஆறுமுகநாவலரிடம், நீங்கள் தமிழிலேயே சொல்லுங்கள் அதை, நீதி மன்ற அதிகாரி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறுவார் என்று உத்தரவிட்டார்.

ஆறுமுகநாவலரும் சரியென ஒப்புக்கொண்டு, ''அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப்புக்குழி'' என்று தொடங்கினார். அவரின் செந்தமிழின் பேச்சைக்கேட்டு, அதை மொழிபெயர்க்க முடியாமல் ஆங்கிலேய மொழி பெயர்ப்பாளர் திணறிப்போனார். கோபமுற்ற நீதிபதி, மீண்டும் ஆறுமுகநாவலரிடம் ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட்டார். ஆனால், ஆறுமுகநாவலரோ மறுத்து தமிழிலேயே கூறினார். அவர் சொன்னதை அவரது சீடர், மொழிபெயர்த்துக் கூறினார். சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர், கடற்கரையோரம் காற்று வாங்கச் சிறு நடைக்குப் புறப்பட்டபோது என்பதுதான் ஆறுமுக நாவலர் கூறியதற்கு அர்த்தம்.

வறுமைக்கும் துன்பத்துக்கும் சகல பாவங்களுக்கும் பிறப்பிடம் மதுபானம் தான் என்பதை 1874 ஆம் ஆண்டு வெளியிட்ட 'இலங்கைப் பூமி சரித்திரம்' நூலில் தெளிவு படுத்தியுள்ளார். இதுதொடர்பாக அந்த நூலில், மதுபானம் மூலம் ஆங்கிலேயருக்கு ஆண்டுக்குப் பல லட்ச ரூபாய் வருமானம் வருகிறது. ஆங்கிலேயர், தமக்குச் சாராயத்தால் எய்தும் பொருளைப் பிறவாயில்கள் சிலவற்றால் எய்துவிக்கத் தலைப்பட்டுக் கொண்டு சாராயத்தை ஒழிப்பாராயின், இலங்கை மக்கள் செல்வமும் ஆரோக்கியமும் அடைவார்கள் என்று மதுவுக்கு எதிராக அன்றே குரல்கொடுத்துள்ளார்.

இன்றைய நூற்றாண்டிலும் ஆறுமுக நாவலர் போன்ற தமிழறிஞர்கள் உயிருடன் இருந்திருந்தால்... தமிழுக்கு என்றுமே அழிவிருக்காது என்பது நிச்சயம். ●

**நேற்று அவரது பிறந்த தினம்**



# திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப் பிரசங்கம் செய்து நாவலர் பட்டம் பெற்றார்

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம், நல்லூர் என்னும் ஊரில் 1822 டிசெம்பர் 18 இல் (சித்திரபானு ஆண்டு மார்கழி 5) புதன் கிழமை அவிட்ட நட்சத்திரத்தில் கந்தப் பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு இறுதி மகனாகப் பிறந்தார்.

நாவலரின் இயற்பெயர் ஆறுமுகம்பிள்ளை என்பதாகும். தகப்பனார் ப.கந்தப்பிள்ளை, பேரன் பரமானந்தர், பூட்டன் இலங்கைக் காவல முதலியார் ஆகிய அனைவரும் தமிழ் அறிஞர்கள். அரசாங்கத்தில் வேலை பார்த்தவர்கள். நாவலருக்கு நான்கு மூத்த சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருந்தனர். சகோதரர்கள் நால்வரும் அரசாங்க உத்தியோகத்தர்கள். சகோதரிகளுள் ஒருவர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களின் தாயார்.

ஐந்தாவது வயதில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற நாவலர், நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடம் நீதிநூல்களையும் தமிழையும் கற்றார். ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். மூத்த தமயனாரால் முதலில் சரவணமுத்துப் புலவரிடமும் பின்னர் அவரது குருவாகிய சேனாதிராச முதலியாரிடமும் உயர்கல்வி கற்க அனுப்பப்பட்டார். பன்னிரண்டாவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுப் புலமை பெற்றார்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த முன்னணி ஆங்கிலப் பாடசாலையான மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் (இக்காலத்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) கற்று ஆங்கிலத்திலும் திறமை பெற்றார். அவரது 19 வது வயதில்(1841) அப்பாடசாலையில் ஆசிரியராகப் பணியேற்ற நாவலர், அப்பாடசாலையின் நிறுவுநராகவும், அதிபராகவும் இருந்த பேர்சிவல் பாதியார் கிறிஸ்த்தவ விவிலியத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் வேலைக்கு உதவியாக இருந்து பணியாற்றினார். பேர்சிவல் பாதியாருடன் சென்னைப்பட்டணம் சென்று அச்சிடுவித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார்.

### சமயப் பணி

சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவான கல்வி, சைவசமய வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆகிய நோக்கங்களுக்காகப் பணிபுரியத் தொடங்கினார் நாவலர். சைவ சமயம் வளரும் பொருட்டு பிரசங்கம் செய்வதெனத் தீர்மானித்தார். இவரது முதற் பிரசங்கம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் டிசெம்பர் 31, 1847 ஆம் ஆண்டு நடைபெற்றது. பின்னர் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கங்களின் விளைவாகப் பெரும் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது.

வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். சமய வளர்ச்சிக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்து செப்ரெம்பர் 1848 இல் தமது மத்திய கல்லூரி 3 பவுண் மாதச் சம்பள ஆசிரியப் பணியைத் துறந்தார்.

### அச்சு இயந்திரத்துடன் யாழ்ப்பாணம் வந்தார்

சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சி யந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் வைப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர் பட்டத்தைப் பெற்றார். சென்னையில் சிலகாலமிருந்து சூடாமணி நிகண்டுரையும் சௌந்தரியலங்கரி உரையும் அச்சிற் பதித்தபின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இல்லத்தில் வித்தியானுபாலனயந்திரசாலை என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார். திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார். ●




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

ஒலிவியா கோல்ட்ஹில் குவார்ட்ஸ் இதழின் தனது கட்டுரைக்கு தலைப்பிட்டிருந்தார்: பெண் வன் கொடுமையில் ஈடுபடுபவர்களது பெயர்களை ஒன்லைனில் வெளியிடுவது சட்டத்தை தமது கைகளில் எடுத்துக் கொண்ட கும்பல்களால் வழங்கப்படும் நீதியாக இருக்கலாம், ஆயினும் அது நீதியே அல்ல என்பதைக் குறிப்பிடுவதற்காகத் தான் சட்டத்தை தமது கைகளில் எடுத்துக்கொண்ட கும்பல்களால் வழங்கப்படும் நீதி என்ற வார்த்தைப் பிரயோகம் பயன்படுத்தப்படுகிறது என்பதை கோல்ட்ஹில் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

மெக்கார்த்திய கண்டனங்களுக்கு


Roxane Gay (Photo credit: Slowking4)

எதிரான எதிர்ப்புகள் விடயத்தில், ரோக்ஸான் கேய் (Roxane Gay) நியூ யோர்க் டைம்ஸில், ''பெயர்கூறாமல் வெளிப்படுத்துவதிலான அவதூறு மற்றும் அறநெறி குறித்து நிறைய கை பிசையப்படுகின்றது'' என்று கடுமையாகப் புகார்கூறினார்.

"#MeToo சமூக ஊடகப் பிரசாரத்தில் வாழ்வின் அத்தனை பிரிவுகளில் இருந்தும் ஏராளமான பெண்கள் துன்புறுத்தல் மற்றும் தாக்குதல் குறித்து தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கும் நேரத்தில், பொய்க் குற்றச்சாட்டுகள் என்ற கருத்தையும் கூட கொண்டுவருவதென்பது காலப்பொருத்தமற்றதாகவும் முரட்டுத்தனமானதாகவும் தெரிகிறது என்றுஸ்பிள்ண்டர்நியூஸ்(Splinternews) இல் இஷா அரான் புகாரிட்டார்.

மீண்டும், இவை அனைத்துமே, தம்மால் கூறப்படும் இந்த சித்திரவதையான சூழ்நிலைமைகள் குறித்த விவரிப்புகளை தமக்கு இன்னும் அதிக செல்வத்தைச் சேர்ப்பதற்கான நெம்புகோலாக பயன்படுத்த விரும்புகின்ற, மக்களின் ஒரு வசதியான பிரிவில் இருந்தே வருகின்றன.

இந்த பிற்போக்கான கருத்துகளின் பின்னால் பல தசாப்த கால சித்தாந்த மற்றும் அரசியல் பிற்போக்குத்தனம் ஒளிந்திருக்கிறது, அதனுடன் பொறாமையின் பெரும் அளவும் கூட.

NBC செய்தி வலைத் தளத்தில் வழக்கறிஞரும் எழுத்தாளருமான ஜில் ஃபிலிபோவிக் விளக்கியவாறாக, ''கிட்டத்தட்ட ஒவ்வொரு தொழிற்துறையிலும் தலைமையில் இருக்கும் ஆண்களின் பல இடங்களில் பெண்கள் அமர்வதன் மூலமாக, நாம் உண்மையான பெண் களது அதிகாரத்துக்கு நெருக்குதலளிப்பது அவசியம். அது தகாதசெயல்களை முற்றிலுமாய் தடுத்து விடாது, ஆனால் நிச்சயமாகக் குறைக்கும்.''

இந்த சொத்துகளை பாதுகாப்பதும் சேர்ப்பதும் முதலாளித்துவ சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படுகின்ற மட்டத்திற்கும், அரசியல் எதிர்ப்பானது திசை திருப்பப்படுகின்ற அல்லது மட்டுப் படுத்தப்படுகின்ற மட்டத்திற்குமே நடக்க முடியும். இது ஒடுக்குமுறையை பொதுமைப்படுத்தும் பாதைகளில் ஒன்றாகும்.

இந்தப் பிரசாரத்தை ஒரு பாலியல் சிக்கவைப்பு வேட்டை என்று கூறுவது, அந்த வரையறைகளின் அரசியல்-சட்ட அர்த்தத்தில் முற்றிலும் பொருத்தமானதாகும். சிக்கவைப்பு-வேட்டை (witch-hunt) என்பது பிரிட்டிஷ் வழக்காற்றில் பொதுமக்களின் நலனைப் பாதுகாப்பதான சாக்கில் அதிருப்தியாளர்களை சுற்றிவளைப்பது அல்லது அம்பலப்படுத்துவதற்கான ஒரு கடுமையான பிரசாரம் என்றும் அமெரிக்க வழக்காற்றில் துரோகம், அரசியல் சதி நடவடிக்கைகள் மற்றும் இது போன்றவற்றை வெளிக்கொண்டு வருவதற்காக வெளிப்பட நடத்தப்படுகின்ற ஒரு விசாரணை, இது பொதுவாக பெரும் விளம்பரத்துடன் நடத்தப்படுகிறது என்பதுடன் பெரும்பாலும் முடிவுக்கு வரவியலாத ஆதாரங்களை நம்பியிருக்கிறது. அத்துடன் பிரபலமற்ற அபிப்பிராயங்கள் குறித்த மக்களின் அச்சத்தைப் பயன்படுத்திக் கொள்கிறது என்றும் கோலின்ஸ் (Collins) இணைய அகராதி வரையறுக்கிறது.

அரசியல் சதிகளுக்கு எதிரான தாக்குதல் இன்னும் தொடங்கியிருக்கவில்லை என்று கருதினால், அதற்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்!

முதலிடத்தில் பல்வேறு வகையான பாலியல் மற்றும் சமூக விரோத நடத்தைகளைப் பற்றிக் குறிப்பிடும் 1934 ஜூலை முதலாம் திகதி கண்டிப்புடன் அமுல்படுத்தப்பட்ட ஹொலிவுட்டின் தயாரிப்புத் துறை சட்டம், ஒரே தடவை கூட அரசியல் அல்லது வர்க்கப் போராட்டம் குறித்து குறிப்பிட்டது கிடையாது. அந்த ஆண்டு, இடது-சாரி சோசலிஸ்டுகள், ட்ரொட்ஸ்கிஸ்டுகள் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களின் தலைமையில் டொலீடோ ஆட்டோ-லைட் வேலை நிறுத்தம் (Toledo Auto-Lite strike), மினியாப் பொலிஸ் டிரக் ஓட்டுநர்கள் வேலை நிறுத்தம் மற்றும் சான் பிரான்சிஸ்கோ துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஆகிய மூன்று பரவலான ஆதரவைப் பெற்ற வேலை நிறுத்தங்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட ஒரு அசாதாரண வெடிப்பான ஆண்டாக இருந்தது.

பொருளாதார மந்தநிலையின் மத்தியில் இந்த சட்டத்தை அமுல்படுத்தியமையானது சந்தேகத்திற்கிடமின்றி, அத்தனை வகையான அறநெறி மற்றும் சமூகக் கற்பிதங்களின் பொறிவு மற்றும் அத்தகையதொரு பொறிவின் நீண்டகாலப் பின்விளைவுகள் ஆகியவை குறித்து ஆளும் வர்க்கத்திற்குள் உருவாகியிருந்த ஒரு பொதுவான மற்றும் நியாயமான பதற்றத்தைப் பிரதிபலித்தது. சில சமயத்திற்கு முன் நாம் குறிப்பிட்டதைப் போல, தயாரிப்புச்சட்டத்தின்அமுலாக்கமானது துல்லியமாய், மந்தநிலையின் எதார்த்தங்கள் திரையில் பிரதிபலிப்பைக் கண்டுவிடக் கூடாது என்பதை உறுதி செய்து கொள்வதற்காக திரைத் துறையினர் மற்றும் அதன் மேற்பார்வையாளர்கள் மேற்கொண்ட வழிவகைகளில் ஒன்றாக இருந்தது.

பாலியல் தூர்நடத்தை பிரசாரமானது பல வழிகளிலும் நேர்மையற்றதாக இருக்கிறது. உதாரணமாக, ஹொலிவுட் அல்லது பொழுதுபோக்குத்துறை தான் பொதுவாக அமெரிக்காவில் பாலியல் மற்றும் வேலையிட உறவுகளின் அளவுகோல் போன்று இதற்கான கேலிக்குரிய சாக்கு அமைந்திருக்கிறது. 2014 இல் நடத்தப்பட்ட பொது சமூக கணக்கெடுப்பில், அமெரிக்கர்களது எதேச்சையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாதிரியிடம் கடந்த 12 மாதங்களில், நீங்கள் வேலையில் இருக்கும் போது நீங்கள் எவர் மூலமாவது பாலியல் தொந்தரவை சந்தித்திருக்கிறீர்களா? என்று கேட்கப்பட்டது. 3.6 சதவீத பெண்கள் ஆம் என்று பதிலளித்தனர், இது 2002 இல் 6.1 ஆக இருந்ததில் இருந்து சரிந்திருந்தது. இது ஒரு முடிவுக்கு வரச் செய்கின்ற புள்ளிவிவரம் இல்லை தான், ஆயினும் பல்வேறு பத்தியாளர்களும் அறிவாளிகளும் விவரிப்பதைப் போல முற்றுகை நிலையின் ஒரு சுட்டிக்காட்டலாக இல்லை.

இவர்கள் அமெரிக்க மற்றும் உலக மக்களின் மிகப்பரந்த எண்ணிக்கையிலானோரது, - அவர்கள் ஆணோ பெண்ணோ- நிலைமைகள் குறித்து சிறிதும்அக்கறைகாட்டியதுகிடையாது. வறுமை, ஓய்வூதியங்கள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு உதவிகளின் அழிப்பு, கருக்கலைப்பு உரிமைகள் மோசமான முறையில் திரும்பப் பெறப்படுவது, அமெரிக்காவின் இலாபநோக்கற்ற பாலியல் சுகாதார சேவை வழங்கும் Planned Parenthood மற்றும் பிற மிகமுக்கியமான பெண்களது சுகாதாரத் திட்டங்களின் மீதான தாக்குதல், வீடின்மை, வலிமருந்து (opioid) நெருக்கடி மற்றும் தற்கொலை விகிதத்திலான அதிகரிப்பு ஆகியவையெல்லாம் அவர்களைக் கொஞ்சமும் கூட அசைப்பதில்லை. ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் பெரிய படுகொலைகள் குறித்த, சட்டவிரோத ஆளில்லா விமானத் தாக்குதல்கள் மற்றும் கொலைப் பட்டியல்கள் குறித்த அவர்களது எதிர்ப்புகள் எங்கே போயின?

குறிப்பாக, ஜனநாயகக் கட்சி பாலியல் குற்றங்கள் வியாபாரத்தில் ஆழமாய் மூழ்கியிருக்கிறது. 2016 தேர்தலில், ஹிலாரி கிளிண்டனின் வெற்றிக்கான மூலோபாயமானது, ஸ்டான்ஃ போர்ட் பிராக்டர்னர் வழக்கு (Brock Turner case), திருநங்கைகளுக்கு குளியலறை அணுகல் மற்றும் வெள்ளை சிறப்புரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஜனநாயகக் கட்சியினர் இவை அத்தனையிலும் பிரம்மாண்ட முதலீடு செய்தனர், அது தோற்றது. இப்போது அவர்கள் பணயத்தை இரட்டிப்பாக்குகிறார்கள். வெள்ளை சிறப்புரிமை, ஆண் பாலியல்குணம் கொண்டு துணையளிக்கப்படுகிறது. இது மக்களின் ஒரு வரம்பு பட்ட, சலுகையுடைய பிரிவிடம் தங்கியிருக்கிறது.

பெப்ரவரி 1692 இற்கும் மே 1693 இற்கும் இடையில் மாஸாசூசெட்ஸ் மாநிலத்தில் இடம்பெற்ற சேலம் (Salem) சூனிய விசாரணைகள் வழக்கைப் படிக்கும் எவரொருவரும் அது வெறுமனே மக்களது வெறிக் கூச்சலால் மட்டும் நடக்கவில்லை, திட்டவட்டமான பொருளாதார மற்றும் சமூக நிகழ்முறைகளும் அதில் பங்களித்திருந்தன என்ற முடிவுக்கே வருவார்கள். ஆர்தர் மில்லரின் திக் ரூசிபிள்(The Crucible) அறிமுகத்தில் கிறிஸ்டோபர் பிக்ஸ்பி குறிப்பிடுவதைப் போல, 1692 இல் சேலம் கொந்தளிப்பாக இருந்தது. அரச சாசனம் திரும்பப் பெறப்பட்டிருந்தது. நில உரிமைகள் ஏற்கனவே இருந்தவை இரத்துச் செய்யப்பட்டிருந்தன. மற்றவர்களுக்கு இன்னும் வந்துசேர்ந்திருக்கவில்லை. இடம்பெயர்க்கப்படலாம் என்ற பயத்தில் ஒவ்வொருவரும் அக்கம்பக்கம் வசிப்பவர்களை சந்தேகக்கண் கொண்டு பார்த்தனர். அது விரிசல்கள் நிரம்பியிருந்த ஒரு சமூகமாக இருந்தது.

இப்போதைய பாலியல் வெறிக் கூச்சல் குறித்து கவனமாக ஆராயும் எவரொருவரும் இன்றைய அமெரிக்காவின் தோலுக்கு அடியில் சென்று பார்த்து, அதன் தனி வகை கொந்தளிப்பை புரிந்து கொள்வது அவசியமாயிருக்கும்.

(கேள்வி தொடரும்...)


Jill Filipovic

காலைக்கதிர்
Kalaikkathir



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உரு வெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

**கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 40**

## குடுமி முடிந்தேன்

**ஆரம்ப ஆயத்தங்கள் குணசிங்கம், குமணன்**

நல்லூர்த் தேவஸ்தானத்திடம் சி.வீ.கே.சிவஞானம் பெற்றுத்தந்த நிலத்துண்டில், கம்பன் கோட்டம் ஒன்றைக் கட்டுவதாய் முடிவு செய்தோம். எங்கள் கையிலோ ஒரு சதமும் இல்லை. எங்களது 'சீனியராய்' யாழ். இந்துவில் படித்த குணசிங்கம் என்பவர், அப்பொழுது புகழ்பெற்ற கட்டட வரைஞராய் இருந்தார். நாம் சென்று கேட்டதும் கம்பன் கோட்டத்திற்கான வரைபடத்தை, அவர் இனாமாய் வரைந்து தந்தார். அக்கட்டடத்தைக் கட்டி முடிக்க மூன்று லட்சம் ரூபா செலவாகும் என, அவர் சொன்ன போது நாங்கள் திகைத்துப் போனோம். ஆனாலும், அவர் நீங்கள் முதலில் வேலையைத் தொடங்குங்கள், பிறகு காசு கிடைக்கக் கிடைக்க மிகுதியைக் கட்டலாம் என்று ஊக்கம் தந்தார். தன்னோடு பணியாற்றிய குமணன் என்கின்ற பொறியியலாளரை, கட்டட மேற்பார்வைக்கெனத் தந்துதவினார். அவ்விருவரும் எவ்வித கட்டணங்களுமின்றி, கம்பன் கோட்டக் கட்டடப் பணிகளுக்குச் செய்த உதவிகளை மறக்க முடியாது. இன்று அவ்விருவரும் ஆஸ்திரேலியாவில் வாழ்கின்றனர். இன்றும் அவர்கள் தங்களால் முடிந்த அளவு கம்பன் பணிக்கு உதவி வருகின்றனர்.

***

**மலசலகூட நிலத்தில் கம்பன் கோட்டம்**

1986 பெப்ரவரி 10 ஆம் திகதி அடிக்கல் நடும் விழாவொன்றை நடத்தினோம். எங்களுக்குத் தரப்பட்ட நல்லூர்க் கோயிலுக்குச் சொந்தமான நிலத்துண்டில், முன்பு ஒரு பொது மலசலகூடம் இருந்து வந்தது. பலகாலம் பாவிக்கப்படாமல் இருந்த அம்மலசலகூடக் கட்டடத்தை, எங்கள் கழகத் தொண்டர்களே இடித்துச் சுத்தப்படுத்தி, ஒரேநாளில் அத்திபாரம் இடுமளவிற்கான நிலப்பரப்பாய் ஆக்கினர். கடுமையான அவ்வேலையால், தொண்டர்கள் பலரது கைகளிலும் இரத்தக்காயம் உண்டாயிற்று. நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்காரரான இராஜலிங்கம், தன் தேவைக்கு வாங்கி வைத்திருந்த, இரும்புக் கம்பிகள் அனைத்தையும் எமக்குத் தந்துதவியதோடு, குழாய்க் கிணறு வெட்டும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.



## கம்பன் கோட்ட அடிக்கல் நாட்டு விழா 10.02.1986

அப்போதைய யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில், நல்லை ஆதீனத்தில் மேற்குறித்த திகதியில், அடிக்கல் நடும் விழா நடைபெற்றது. அங்கு கூட்டம் நடத்தி முடிந்த பின்னர், காணிக்கு அனைவருமாக வந்து அடிக்கல் நட்டோம். முதல் அடிக்கல்லை துணைவேந்தர், பேராசிரியர் சு.வித்தியானந்தன் எடுத்து வைத்தார். தொடர்ந்து எங்கள் ஆசிரியர்கள் வேலன் மாஸ்ரர், சிவராமலிங்கம் மாஸ்ரர் ஆகியோரும், பேராசிரியர் சண்முகதாஸ், டொமினிக் ஜீவா, சீ.வி.கே. சிவஞானம் போன்ற, பலரும் அடிக்கற்களை நட்டனர். அன்று கிரியைகள் செய்ய வந்திருந்த, அர்ச்சகருக்குக் கொடுக்க கூட எங்களிடம் பணமிருக்கவில்லை. சீ.வி.கே. சிவஞானம் அவர்கள் தான், வந்த அந்தணருக்குத் தட்சணை கொடுத்தார்.

**ஊக்கம் தந்த 'ஈழநாடு' ஆசிரியர் என்.சபாரட்ணம்**

நாம் கம்பன் கோட்டம் கட்டத் தொடங்கி விழா எடுப்பதை, எங்கள் கல்லூரியின் முன்னாள் அதிபரும், அப்போதைய 'ஈழநாடு' பத்திரிகை ஆசிரியருமான, என்.சபாரட்ணம் அவர்களிடம் தெரிவித்தபோது, ''யாழ்ப்பாணம் முழுவதற்கும் இராமாயணம் தெரியும்படி செய்யுங்கள்'' என்று, மகிழ்ந்து வாழ்த்தினார். ஓரளவு அவர் வார்த்தையை நாம் காப்பாற்றினோம் என்றே சொல்லவேண்டும். எம்மை வாழ்த்தியதோடல்லாமல் 'ஈழநாடு' பத்திரிகையில், ஆசிரியர் தலையங்கமும் எழுதி எம்மை ஊக்கப்படுத்தினார் அவர். மேலும் பல பத்திரிகைகளும் கூட, ஆசிரியர் தலையங்கம் எழுதியும், செய்திகள் வெளியிட்டும், கம்பன் கோட்டம் அமைக்கும் எம் முயற்சியை ஊக்கப் படுத்தின.

**முதற்கட்ட வேலைகள் முடிந்தன**

நெருக்கடிகளுக்கிடையில் தொடங்கப்பட்ட கம்பன் கோட்டப் பணிகளின், முதற்கட்ட வேலைகள் (கீழ்த்தளம்) பல கழக ரசிகர்களின் ஆதரவால், 1986 ஓகஸ்ட் மாதத்தில் ஓரளவு நிறைவு பெற்றன. வேலைகள் பூரணப்படாமலே, எனது பெற்றோர், பேராசிரியர் சண்முகதாஸ், நண்பர்களான மகாராஜா, ஈஸ்வரநாதன் முதலானோரோடு சேர்ந்து, ஒரு நல்ல நாளில், அந்தக் கட்டடத்தின் ஓர் அறைக்கு நிலை வைத்து நாம் பால் காய்ச்சினோம். இராஜலிங்கம் குடும்பத்தினர் திரும்பி யாழ் வராததால், தொடர்ந்தும் நாம் வைமன் ரோட்டிலேயே தங்க வேண்டியிருந்தது. அதனால், கட்டப்பட்ட கோட்டத்தின் ஓர் அறைக்கு மட்டும் கதவு போட்டு, கந்தர்மட அலுவலகத்திலுள்ள பொருள்களையெல்லாம் கொண்டு வந்து வைத்தோம். பூட்டப்பட்ட கட்டடத்தின் ஜன்னலை உடைத்து திருடன் புகுந்து, இருந்த பொருள்களையெல்லாம் ஒருநாள் திருடிப் போனான்.

**காத்திருந்து கைக்கு வராமல் போன பணம்**

அக்காலத்தில் கம்பன் கோட்டம் அமைக்கவென மாநகரசபை ஊழியர்களிடம், சீ.வி.கே. சிவஞானம் ஒரு பெருந்தொகைப் பணத்தைச் சேர்த்தார். அப்பணம் எங்கள் கைக்கு வந்து சேரவில்லை. ஊழியர்களிடம் வலியுறுத்தி அவர் பணம் சேர்த்தது, அங்குள்ள சிலருக்குப் பிடிக்கவில்லை போலும். அவர்களின் தூண்டுதலால் அப்போது யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த பல இயக்கங்களுள் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு, சீ.வி.கே.யிடமிருந்து அப்பணத்தைப் பறித்துச் சென்றது.

**கிட்டுவின் கோரிக்கையை மறுத்தேன்**

கிட்டு ஒரு கதாநாயகனாக ஆளுமையோடு யாழில் உலாவந்த நேரம் அது. அப்போது எல்லா இயக்கங்களும் யாழில் இருந்தன. எங்கள் கம்பன் கோட்ட கட்டட நிதிக்கென, மாநகரசபை ஆணையாளர் சிவஞானம் அவர்கள் சேர்த்திருந்த பணத்தை, ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கம் பறித்துச்சென்றதும், கிட்டுவோடு நெருக்கமாக இருந்த சிவஞானம் அவர்கள், அச்சம்பவத்தைக் கிட்டுவுக்குச் சொல்ல, ''அண்ணை கம்பன் கழகத்தை புலிகளின் சார்பமைப்பு என்று அறிவிக்கச்சொல்லுங்கள். நான் பணத்தை மீட்டுத் தருகிறேன்'' என்று கிட்டு சொல்லியிருக்கிறார். அச்சம்பவத்தை சிவஞானம் எங்களுக்குச் சொல்ல, அதற்கு உடன்பட நாம் மறுத்துவிட்டோம். எமது முடிவை சிவஞானம் அவர்களும் வரவேற்றார். இயக்கத்துள் முற்று முழுதாய் கரைய விரும்பாத, எங்கள் நிலைப்பாட்டுக்கு சான்றான சம்பவம் இது.



(தொடரும்...)





யாழ்.இலக்கிய குவியத்தின் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். பொது நூல் நிலைய தேநீர்சாலையில் வைத்தியர் வேலணையூர் தாஸ் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் ஈழத்து எழுத்தாளர்கள், கவிஞர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-19)











யாழ். மன்ப உல் உலூம் முன்பள்ளிச் சிறார்களின் கலை விழாவும் பட்டமளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது மௌலவியும் முதியோர் சங்கத் தலைவரும் பரிசில்களை வழங்கினர். நிகழ்வின் சில காட்சிகள். (இ-19)





உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் பெண்களுக்கு அரசியல் ரீதியில் விழிப்பூட்டும் செயற்றிட்டம் ஒன்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஒன்றிணைந்து பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பெண்கள் குழுவால் இவ் விழிப்பூட்டல் செயலமர்வு நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமாகவே வவுனியாவிலும் இடம்பெற்றது.

பெண்கள் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இந்த விழிப்பூட்டல் செயலமர்வை முன்னெடுத்திருந்தார். இதில் உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடவுள்ள பெண்கள் பலரும் கலந்து கொண்டனர். (இ-100)

# மன்னாரில் 86,094 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி

மன்னார், டிசெ 19

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரசபை, மற்றும் பிரதேசசபை, நானாட்டான் பிரதேசசபை, மாந்தை மேற்கு பிரதேசசபை மற்றும் முசலி பிரதேசசபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றல் தேர்தலில் இந்த முறை வாக்களிப்பதற்கு 86 ஆயிரத்து 94 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

அந்த ஐந்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இருந்து 54 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 94 வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இந்த நிலையில் மன்னார் நகர சபைக்கு 7 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 14 வாக்கெடுப்பு நிலையங்களில் 14 ஆயிரத்து 770 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்

இதற்கு அமைவாக உப்புக்குளம் பிரிவில் 3073 பேரும், பள்ளிமுனை பிரிவில் 2123 வாக்காளர்களும் , எழுத்தூர் பிரிவில் 2879 வாக்காளர்களும், சாவக்கட்டு பிரிவில் 1906 நபர்களும், சௌத்பார் பிரிவில் 2342 பேரும், பனங்கட்டுகொட்டு பிரிவில் 1592 நபர்களும், பெற்றா பிரிவில் 855 நபர்களும், வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன், மன்னார் பிரதேச சபைக்கு 11 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 22 வாக்கெடுப்பு நிலையங்களில் 22,468 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதனடிப்படையில், தலைமன்னாரில் 1203 வாக்காளர்களும், தலைமன்னார் பியர் கிழக்கில் 2078 பேரும், துள்ளுக்குடியிருப்பு பிரிவில் 1022 பேரும், பேசாலையில் (முதலாம் வட்டாரம் முதல் ஏழாம் வட்டாரம் வரை) 1808 பேரும், பேசாலை தெற்கு 1807 பேரும், சிறுத்தோப்புப் பிரிவில் 2332 பேரும், புதுக்குடியிருப்பு பிரிவில் 1482 பேரும், எருக்கலம்பிட்டி பிரிவில் 2888 வாக்காளர்களும், தாழ்வுபாடு பிரிவில் 2699 பேரும், தாராபுரம் பிரிவில் 1560 பேரும், உயிலங்குளம் பிரிவில் 3562 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நானாட்டான் பிரதேசசபைக்கு 8 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 23 வாக்கெடுப்பு நிலையங்களில் 15,702 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதன் பிரகாரம் வங்காலை வடக்கில் 1917 வாக்காளர்களும், வங்காலை பிரிவில் 2026 பேரும், நானாட்டான் பிரிவில் 1678 பேரும், வாழ்க்கைபெற்றான்கண்டல் பிரிவில் 2577 பேரும், இலகடிப்பிட்டி பிரிவில் 2313 பேரும், முருங்கன் பிரிவில் 2040 பேரும், கற்கடந்தகுளம் பிரிவில் 1202 பேரும், கட்டையடம்பன் பிரிவில் 1999 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச சபை பிரிவுக்கு 13 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்ய 21 வாக்கெடுப்பு நிலையங்களில் 18 ஆயிரத்து 636 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வெள்ளாங்குளம் பிரிவில் 1721 வாக்காளர்களும், பெரியமடு பிரிவில் 2057 பேரும், இலுப்பைக்கடவை பிரிவில் 1515 பேரும், விடத்தல்தீவு பிரிவில் 2126 பேரும், நெடுங்கண்டல் பிரிவில் 1493 பேரும், ஆட்காட்டிவெளி பிரிவில் 1501 பேரும், அடம்பன் பிரிவில் 1504 பேரும், வட்டக்கண்டல் பிரிவில் 1973 நபர்களும், மடு பிரிவில் 1769 பேரும், இரணை இலுப்பைக்குளம் பிரிவில் 1308 பேரும், காக்கியான்குளம் பிரிவில் 1669 வாக்காளர்களும் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர்.

முசலி பிரதேச சபை பிரிவில் 10 வட்டாரங்களுக்கான உறுப்பினர்களைத்தெரிவு செய்ய 14 வாக்கெடுப்பு நிலையங்களில் 14 ஆயிரத்து 518 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அரிப்பு மேற்கு பிரிவில் 877 வாக்காளர்களும், அரிப்பு கிழக்கு பிரிவில் 532 பேரும், பண்டாரவெளி பிரிவில் 1493 பேரும், புதுவெளி பிரிவில் 894 பேரும், சிலாபத்துறை பிரிவில் 1801 பேரும், அகத்திமுறிப்பு, கூழாங்குளம் பிரிவில் 1846 பேரும், பொற்கேணி பிரிவில் 1299 பேரும், மருதமடு, வேப்பங்குளம் பிரிவில் 2073 பேரும், கொண்டச்சி பிரிவில் 1757 பேரும், பாலைக்குழி பிரிவில் 1946 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ஐ)

# நீர் நிலைகளில் நீராடாதீர்கள் !



## பொலிஸார் வேண்டுகோள்

கொழும்பு, டிசெ 19

நுவரெலியா மாவட்டத்தின், மஸ்கெலியா நல்லதண்ணீர் பிரதேசத்தில், அமைந்துள்ள சிவனொளிபாத மலைக்கு ஆண்டு தோறும் டிசெம்பர் மாதம் முதல் மே மாதம் வரை பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் யாத்திரை செய்கின்றனர்.

இந்நிலையில், சிவனொளிபாதமலைக்கு வரும் பக்தர்கள் காசல்ரீ மற்றும் மவுசாகலை நீர் நிலைகளில் நீராடவேண்டாம் என பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறித்த நீர் நிலைகள் அடர்த்தியாகவும் கடும் குளிர்மையாகவும் காணப்படுவதாகவும் இதனால் அவதானமாக இருக்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

ஹற்றன் வீதியூடாக செல்பவர்கள் நீராடுவதற்கென, அம்பகமுவ பிரதேச சபையால் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்பான இடங்கள் சிலவற்றில் நீராடுமாறும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன், சில பாதைகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றமையால் சாரதிகள் அவதானமாக வாகனத்தைச் செலுத்து மாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)

# சிங்களப் பெண்களுக்கு திட்டமிட்டுக் கருத்தடை

## ஞானசார தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ 19

கடந்த 10 வருட காலத்துக்குள் சிங்கள மற்றும் தமிழ் பெண்களில் 9 லட்சத்துக்கும் அதிகமானோர் எல்.ஆர்.டி. (கருத்தடை) இற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன எனப் பொதுபல சேனா செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவல்களைச் சாட்சியுடன் நிரூபிக்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

75 வீதமான சிங்களப் பெண்கள் கருத்தடை செய்துகொண்டுள்ளனர் எனவும் முஸ்லிம் பெண்களில் ஒரு சத வீதமே இந்தக் கருத்தடை செய்யாதவர்களாக உள்ளனர் எனவும் தேரர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் சிங்களப் பெண்கள் மாத்திரமின்றிச் சிங்கள ஆண்கள் கூட ஆண்மை இழக்கும் நிலைக்கு மாற்றப்படுகின்றனர் எனவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கையை அரச சார்பற்ற நிறுவனங்கள் சில மேற்கொண்டு வருகின்றனர் எனவும், இதற்கு அரசிலுள்ள அமைச்சர்கள் சிலரின் அங்கீகாரமும் கிடைப் பதாகவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 10 வருடங்களில் இந்த நடவடிக்கைக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் சுமார் 90 கோடி ரூபாவுக்கு அதிகமான நிதியை செலவிட்டுள்ளன எனவும் தேரர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு எல்.ஆர்.டி. செய்து கொள்ளும் ஒரு சிங்களப் பெண்ணுக்கு 500 ரூபா கொடுப்பனவை வழங்குவதாகவும் தேரர் கூறியுள்ளார். (ஐ)

# குளம் சீரமைப்பின்மையால் பரந்தன் விவசாயிகள் சிரமம்

கிளிநொச்சி – பரந்தன் இரசாயனக்குளம் உரிய முறையில் புனரமைக்கப்படாத நிலையில், பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பரந்தன் இரசாயனக்குளம் உரிய முறையில் புனரமைக்கப் படாததால் இதன் கீழ் உள்ள சுமார் 1,800 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதில் சிரமமாக உள்ளது.

குறித்தபகுதியில்அமைந்துள்ள இரசாயனக்குளம் கடந்த 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரண்டு தடவை புனரமைக்கப்பட்டபோதும், குளத்திலிருந்து நீரை விவசாய நிலங்களுக்கு விடுவதற்குரியதுருசுவேலைகள் செய்யப்படாத நிலையில் மேற்படி துருசு சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளை, இந்தக் குளத்தில் காணப்பட்ட மற்றுமொரு நீர் விநியோகம் மேற்கொள்ளும் துருசு முற்றாக அகற்றப்பட்டுள்ளது.

குளத்தின் கீழ் உள்ள நீர் விநியோக வாய்க்கால்களும் புனரமைக்கப்படாது அரைகுறையாக விடப்பட்டுள்ளன.

இவ்வாறு குளத்தின் பணிகள் அரைகுறையாக விடப்பட்ட போதும், குளத்தில் போதிய நீர் காணப்படுகின்ற நிலையில் பரந்தன் நகரக் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள 1,200 ஏக்கர் நிலப்பரப்புக்கும் உமையாள்புரம் கமக்கார அமைப்பின் கீழ் உள்ள 600 ஏக்கர் நிலப்பரப்பிற்கும் நீர் விநியோகம் செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றது.

அத்துடன், பல தடவைகள் இந்தக் குளத்தின் நீர் விநியோக வாய்க்கால்களைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்த போதும், இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

தற்போது குளத்தில் உள்ள நீரை, நீர் இறைக்கும் இயந்திரக் குழாய்கள்மூலம் குளத்தில் இருந்து வெளியேற்றி அதன் மூலம் விவசாய நிலங்களுக்கு நீர்விநியோகம் மேற்கொண்டு வருகின்றோம் எனத் தெரிவித்துள்ளனர். (ஐ)

# இமாச்சல் சட்டசபைத் தேர்தல்; ஆட்சி அமைக்கிறது பா.ஜ.க.!




சிம்லா,டிசெ.19

இமாச்சலப் பிரதேச சட்டசபைத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டுவரும் நிலையில், - ஆளும் காங்கிரஸ் கட்சியை விட பா.ஜ.க. பெருவாரியான இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

68 தொகுதிகளைக் கொண்ட இமாச்சல் பிரதேச சட்டசபைக்குக் கடந்த மாதம் 9ஆம் திகதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் 75.28 விகித வாக்குகள் பதிவாகியிருந்தன. 42 மையங்களில் பதிவான வாக்குகள் எண்ணும் பணி நடைபெற்று வருகிறது.

வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதலே பா.ஜ.க. பெருவாரியான தொகுதிகளில் முன்னிலை பெற்றன. ஆளும் காங்கிரஸ் கட்சி பின்னடைவைச் சந்தித்தது. ஆட்சியமைக்கத் தேவையான 36 இடங்களில் பா.ஜ.க சுமார் 40 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

இதனால், ஆளும் காங்கிரஸை வீழ்த்தி பா.ஜ.க. ஆட்சியமைப்பது உறுதியாகியுள்ளது.

# பாரதீய ஜனதா கட்சி குஜராத்திலும் வெற்றி!



பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத் மாநிலத்தில் பாரதீய ஜனதா 99 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கிறது.

காங்கிரஸ் கட்சியும் பாரதீய ஜனதாவிற்கு சரியான போட்டியை கொடுத்து உள்ளது. காங்கிரஸ் கட்சி 80 தொகுதிகளில் வெற்றியை தனதாக்கி வலுவான எதிர்க்கட்சியாகி உள்ளது.

குஜராத் மாநிலத்தில் பாரதீய ஜனதா வெற்றி பெற்று உள்ள நிலையில் அக்கட்சியின் கூட்டணிக் கட்சியான சிவசேனா, குஜராத்தில் உண்மையான வெற்றியாளர் காங்கிரஸ் கட்சியே எனக் கூறிஉள்ளது. ஆட்சிக்கு வருவது என்பது பெரிய விடயம் கிடையாது என சிவசேனா கட்சியின் தலைவர் சஞ்சய் ராவுத் கூறிஉள்ளார்.

காங்கிரஸ் கட்சி தேர்தலில் வேண்டும் என்றால் தோல்வியை தழுவியிருக்கலாம், ஆனால் அது உண்மையில் பாரதீய ஜனதாவை தோற்கடித்துவிட்டது எனவும் அவர் குறிப்பிட்டு உள்ளார்.

குஜராத் மாநிலத்தில் பாரதீய ஜனதா கட்சி 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சியில் உள்ளது, 'குஜராத் மொடல்' என்ற கோஷத்தை முன்வைத்துதான் பாரதீய ஜனதா தேசத்தில் ஆட்சிக்கு வந்தது. இப்போது குஜராத் மொடல் தோல்வியை தழுவிவிட்டது. குஜராத் மாநிலத்தில் பாரதீய ஜனதா செயல்பாட்டில் மக்கள் மகிழ்ச்சி கொள்ளவில்லை என்றால் நாட்டில் உள்ள மக்களில் மனநிலையை புரிந்துக்கொள்ளுங்கள். தேர்தல் மட்டுமின்றி பாகிஸ்தான், பாதுகாப்பு, காஷ்மீர், ரூபா நோட்டு ஒழிப்பு நடவடிக்கை மற்றும் வேலைவாய்ப்பு, விவசாயம் எந்தஒரு விவகாரத்திலும் மோடி அரசு தோல்வியைத் தழுவிட்டது. - என பாரதீய ஜனதாவின் தேர்தல் பங்காளிக் கட்சியான சிவசேனா விமர்சனம் செய்து உள்ளது.

# ஆர்.கே.நகர் இடைத் தேர்தலுக்காக 2 ஆயிரத்து 500 பொலிஸார் குவிப்பு

ஆர்.கே.நகர் தொகுதி இடைத் தேர்தலில் வாக்குப்பதிவு நடைபெறும் தினத்தன்று 2ஆயிரத்து 500 பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஆர்.கே.நகர் தொகுதியில் வருகிற 21ஆம் திகதி இடைத்தேர்தல் நடப்பதையொட்டி அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளன.

தேர்தல் முறைகேட்டால் கடந்த முறையை போல ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் ரத்து செய்யப் பட்டு விடுமோ, என்கிற எதிர் பார்ப்பு ஏற்பட்டது.

ஆனால் தேர்தலுக்கு இன்னும் 2 நாள்களே இருக்கும் நிலையில் அதற்கான வாய்ப்புகள் ஏதுவும் இருக்கின்றனஎனத்தெரியவில்லை. தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முழு வீச்சில் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஆர்.கே.நகரில் கடந்த 2 நாள்களாகத் தேர்தல் முறைகேடுகள் பல இடங்களில் நடைபெற்றன.

இதன் காரணமாக ஆர்.கே. நகர் தொகுதியில் பதற்றம் நீடிக்கிறது. அசம்பாவித சம்பவங்கள் மேலும் அதிகரித்து விடக் கூடாது என்பதற்காகக் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சட்டம்-ஒழுங்கை பாதிக்கும் வகையில் பெரிய அளவில் மோதல்சம்பவங்கள்நடைபெற்று விடக் கூடாது என்பதில் பொலிஸார் உறுதியாக உள்ளனர்.

வாக்குப்பதிவு நடைபெறும் 21ஆம் திகதி அன்று தொகுதி முழுவதும் ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் 2 ஆயிரத்து 500 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இவர்களுடன் துணை இராணுவ படையினரும் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளத் தயார் நிலையில் இருக்கிறார்கள்.

## ஆர்.கே.நகர் தேர்தல்:

# பணம் கொடுக்கும் வேட்பாளர்களை நீக்கம் செய்யவேண்டும் திருமாவளவன்

ஆர்.கே.நகரில் பணம் கொடுக்கும் வேட்பாளர்களைத் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தென்காசியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒக்கி புயலால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர், எத்தனை பேர் இறந்துள்ளனர்? என்ற தகவலை அரசு இது வரை தெரிவிக்கவில்லை. இதில் முறையான கணக்கெடுப்பும் இல்லை. இதற்கு மத்திய-மாநில அரசுகளின் மெத்தனப்போக்கே காரணமாகும்.

ஒக்கி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மத்திய அரசு உடனடியாக 10 ஆயிரம் கோடி ரூபா நட்டஈடு வழங்க வேண்டும். ஒரு குடும்பத்துக்கு 50 லட்சம் ரூபாவும், குடும்பத்தில் ஒரு வருக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும்.



சென்னை ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் வாக்குகளைப் பெற பணம் கொடுக்கும் சம்பவங்கள் அதிகளவில் நடக்கின்றன. இதனைத் தடுக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே, ஆர்.கே.நகரில் முறைகேடு தொடர்பாக எந்த வேட்பாளர் மீது குற்றச்சாட்டு வருகிறதோ, அந்த வேட்பாளரைத் தமிழக தேர்தல் ஆணையம் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# குஜராத், இமாச்சல் வெற்றி தமிழகத்தில் எதிரொலிக்காது



குஜராத், இமாச்சல் தேர்தல்களின் வெற்றி தமிழகத்தில் எதிரொலிக்காது என்று தி.மு.க. செயல் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் கூறுகையில் -

2 மாநிலத் தேர்தல்களில் வெற்றிபெற்ற பா.ஜ.கவுக்கு வாழ்த்துகள். மத சார்பற்ற கட்சிகள் ஒன்றுசேர வேண்டும் என்பதை முடிவுகள் காட்டுகின்றன. குஜராத், இமாச்சல் தேர்தல்களின் தாக்கம் தமிழகத்தில் எதிரொலிக்காது.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அ.தி.மு.க. மற்றும் டி.டி.வி. அணியினர் தேர்தலில் செய்யும் தில்லுமுல்லு தொடர்பாகத் தேர்தல் ஆணையத்திடம் குற்றச்சாட்டு அளித்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

# ஆர்.கே.நகரில் அ.தி.மு.கவின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது: சரத்குமார்

திருச்செந்தூர்,டிசெ.19

இரட்டை இலைச் சின்னம் கிடைத்திருப்பதால் ஆர்.கே.நகரில் அ.தி.மு.க.வுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என சரத்குமார் தெரிவித்துள்ளார்.

ஆர்.கே.நகரில் இடைத்தேர்தலை நடத்துவது தேர்தல் ஆணையத்தின் கடமை. அங்கு ஏற்கனவே நடந்த இடைத்தேர்தல் ரத்துசெய்யப்பட்டது. தற்போது ஜனநாயக முறைப்படி இடைத்தேர்தலை நடத்துகிறது. இந்த நிலையில், தேர்தல் முறைகேடுகள் இடம்பெறுகின்றன எனக் கூறியிருக்கின்றனர். இது தேர்தல் ஆணையம் சரியாக நடக்கவில்லையா என மக்கள் மத்தியில் ஆழமான கருத்து ஏற்பட்டு விடும்.



எனவே ஆர்.கே.நகர் தேர்தலை, தேர்தல் ஆணையம் நியாயமாகவும் நேர்மையாகவும், ஜனநாயக முறைப்படி நடத்த வேண்டும். அ.தி.மு.கவுக்கு இரட்டை இலை சின்னம் கிடைத்திருப்பதால் அக்கட்சிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. கட்டாயம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும்.

எங்கள் இயக்கம் கடந்த 10 ஆண்டுகளாக அ.தி.மு.க., கூட்டணியில் பயணிக்கின்றது. தற்போது எங்களது கட்சிக் கொள்கை, கோட்பாடுகளை மக்களிடம் நேரடியாகச் சுயமாகச் சொல்வதற்காக நாங்கள் மக்களைச் சந்தித்து வருகிறோம். எங்களது நியாயமான கருத்துக்களை தெரிவித்து வருகிறோம். எங்களது கட்சியின் வளர்ச்சிகாகவும், பலத்தை அறியவும் நேரடியாகப் பயணம் செய்து வருகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# பிலிப்பைன்ஸில் தொடரும் கனமழை; நிலச்சரிவில் சிக்கி 26 பேர் சாவு



போக்குவரத்துச் சீர்குலைவு



மணிலா ,டிசெ.19

பிலிப்பைன்ஸ் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள பிலிரான் தீவில் பெய்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 26 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள பிலிரான் தீவுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை முதல் கனமழை பெய்து வருகின்றது. கைடாக் புயல் காரணமாக பெய்து வரும் கனமழையால் ஆங்காங்கே நிலச்சரிவுகள் நிகழ்ந்துள் ளன. குடியிருப்புப் பகுதியில் பெரும் பெரும் பாறைகள் விழுந்தமையுடன் மண் சரிவும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலச்சரிவில் சிக்கி 26 பேர் பலியாகியுள்ளனர் என அந்நாட்டுப் பேரிடர் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. 30 இற்கும் மேற்பட்டோர் மாயமாகியுள்ளனர். அவர் களை மீட்கும் பணி நடைபெற்று வரு கின்றது எனவும் கூறப்பட்டுள்ளது. 80 ஆயிரம் பேர் பாது காப்பான இடங்களில் தங்க வைக் கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனமழை காரணமாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது இதனால், கிறிஸ்மஸ் விடுமுறைக்குச் சொந்த ஊருக்குச் செல்ல முடியாமல் 15 ஆயிரம் பேர் திண்டாடி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

## கடல் வழியாக 45 நாள்களில் உலகை சுற்றிய பிரான்ஸ் வாலிபர்



பரிஸ்,டிசெ.19

பிரான்ஸைச் சேர்ந்த பிரான்காயிஸ் கபாரட் என்பவர் 42 நாள்களில் கடல் வழியாக உலகைச் சுற்றிவந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் பிரான்காயிஸ் கபாரட்(34). கடல் வழிப் பயணங்களில் அதிக ஆர்வம் உடைய இவர் உலகைக் கடல் வழியாகச் சுற்றி வரத் திட்டமிட்டார். அதற்காக 30 மீற்றர் நீளமுள்ள பாய் மரப்படகில் தனி ஆளாகப் பயணம் மேற்கொண்டார்.

கடந்த மாதம், பிரான்ஸில் இருந்து தனது பயணத்தைத் தொடங்கிய அவர், நேற்றுமுன்தினம் பிரான்ஸ் நாட்டிற்குத் திரும்பினார். அவர் 42 நாள்கள், 16 மணி நேரம், 40 நிமிடம், 35 விநாடிகளில் உலகைச் சுற்றி முடித்தார். கடந்த ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தோமஸ் கோவிலே என்பவர் 49 நாள்களில் படகு மூலம் உலகைச் சுற்றி வந்ததே முந்தைய சாதனையாக இருந்தது.

அந்தச் சாதனையை தற்போது பிரான்காயிஸ் கபாட் முறியடித்துள்ளார். அவர் முந்தைய சாதனையை விட 6 நாள்கள், 10 மணி நேரத்திற்கு முன்னதாக உலகைச் சுற்றிவந்து புதிய சாதனையைப் படைத்துள்ளார். அவரது சாதனை அவரது படகில் உள்ள கறுப்புப்பெட்டி மற்றும் ஜி.பி.எஸ். ஆகியவற்றை சரிபார்த்தபின் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் என உலக படகு வேக கவுன்சிலைச் சேர்ந்த பார்வையாளர் தெரிவித்துள்ளார்.

## சி.ஐ.ஏ. தகவலால் தீவிரவாதிகளின் தாக்குதலை முறியடித்த ரஷ்யா

அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ அளித்த தகவலால் ரஷ்யாவில் நடக்க இருந்த தீவிரவாதத் தாக்குதல் முறியடிக்கப்பட்டுள்ளது எனவும், அதற்காக ட்ரம்புக்கு புடின் நன்றி கூறினார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்தது எனவும், ட்ரம்ப் வெற்றிக்கு ரஷ்ய உளவுத்துறை உதவியது எனவும் குற்றச்சாட்டு உள்ளது. இதற்காக விசாரணையும் நடந்து வருகின்றது. இதேபோல், ட்ரம்ப் – புடின் உறவில் சுமூக நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையில், ரஷ்யாவின் செயிண்ட் பீட்டர்ஸ்பெர்க் தேவாலயத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ ரஷ்யாவுக்குத் தகவல் அளித்துள்ளது. இதன் அடிப்படையில், தீவிர சோதனை நடத்திய ரஷ்ய பாதுகாப்புப் படையினர் 7 பேரை தீவிரவாதிகள் எனக் கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து, ட்ரம்பை தொலைபேசியில் தொடர்பு கொண்ட விளாடிமிர் புடின் இதற்காக நன்றி கூறியுள்ளார்.

(ப)



ட்ரம்புக்கு புடின் நன்றி

## ஹொண்டூரஸ் அதிபர் தேர்தல் சர்ச்சை: ஆர்லேண்டோ வெற்றி என தேர்தல் தீர்ப்பாயம் அறிவிப்பு

ஹொண்டூரஸ் அதிபர் தேர்தல் முடிவுகளில் குழப்பம் நிலவிய நிலையில் தற்போதைய அதிபர் ஆர்லேண்டோ வெற்றி பெற்றார் என அந்நாட்டு தீர்ப்பாயம் அறிவித்துள்ளது.

வட அமெரிக்க நாடான ஹொண்டூரஸின் அதிபராக இருப்பவர் ஆர்லேண்டோ ஹெர்னாண்டஸ். கடந்த மாதம் 26ஆம் திகதி அந்நாட்டு அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் இடையே 1.53 விகித வாக்கு வித்தியாசம் நிலவியது.



இதன் காரணமாகத் தேர்தல் ஆணையம் அதிபர் வெற்றி பெற்றார் என அறிவிக்கவில்லை. இருப்பினும், ஆர்லேண்டோ அதிபராக பொறுப்பேற்றார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த எதிர்க்கட்சி வேட்பாளர் சால்வேதார் நசெரல்லா தேர்தல் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடர்ந்தார். இது தொடர்பான விசாரணை நடைபெற்று வந்த நிலையில், தற்போதைய அதிபர் ஆர்லேண்டோ ஹெர்னாண்டஸ் வெற்றி பெற்றுள்ளார் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஏற்றுக்கொள்ளாத எதிர்க்கட்சிகள் மக்களைப் போராட வருமாறு அழைப்புவிடுத்துள்ளது.

## கிழக்கு ஜெருசலேம் நகரில் புதிய தூதரகத்தை திறப்போம்

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அறிவிப்புக்குப் பதிலடியாக கிழக்கு ஜெருசலேம் நகரில் புதிய தூதரகத்தைத் திறப்போம் எனத் துருக்கி அதிபர் தாயிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

கடந்தாண்டு அமெரிக்க அதிபர் தேர்தல் பிரசாரத்தின் போது, ஜெருசலேமில் அமெரிக்கத் தூதரகம் அமைக்கப்படும் என ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார்.



துருக்கி அதிபர் அதிரடி அறிவிப்பு

இதன் தொடர்ச்சியாக, ஜெருசலேம் இஸ்ரேல் தலைநகராமாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த 6ஆம் திகதி அறிவித்தார். அதைத் தொடர்ந்து பலஸ்தீனத்தில் போராட்டமும், மோதலும் வெடித்தன. 4 பலஸ்தீனியர்கள் கொல் லப்பட்டனர்.

இந்த நிலையில், அமெரிக்க அதிபர் ட்ரம்பின் அறிவிப்புக்கு பதிலடியாக கிழக்கு ஜெருசலேம் நகரில் புதிய தூதரகத்தை திறப்போம் என துருக்கி அதிபர் தாயிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

கடவுளின் அனுமதிப்படியும், விருப்பத்தின்படியும் கிழக்கு ஜெருசலேம் நகரில் எங்கள் நாட்டுத் தூதரகத்தைத் திறப்பதற்கான நாள் நெருங்கி விட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ப)

## ஆஷஸ் தொடரின் மூன்றாவது டெஸ்ட்

# ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் வெற்றி தொடரை 3:0 எனக் கைப்பற்றியது



பேர்த்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடரின் 3ஆவது டெஸ்டில் ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் மற்றும் 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுத் தொடரைக் கைப் பற்றியுள்ளது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. பிரிஸ்பேன்,



அடிலெய்டில் நடைபெற்ற முதல் இரண்டு டெஸ்டில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்ற நிலையில், 3ஆவது போட்டி பேர்த் மைதானத்தில் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. அதன்படி முதலில் துடுப்பாட்டம் செய்த இங்கிலாந்து 403 ஓட்டங்கள் சேர்த்தது. பின்னர் முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய ஆஸ்திரேலியா 9 விக்கெட் இழப் பிற்கு 662 ஓட்டங்கள் குவித்து டிக் ளேர் செய்தது. ஸ்மித் இரட்டைச் சதம் அடித்தார்.

முதல் இன்னிங்ஸில் 259 ஓட்டங்கள் பின்தங்கிய நிலை யில் இங்கிலாந்து 2ஆவது இன் னிங்ஸைத் தொடங்கியது. தொடக்க வீரர் அலஸ்டைர்குக் 14 ஓட்டங்களுடனும், ஸ்டோன் மான் 3 ஓட்டங்களுடனும், ஜோரூட் 14 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்க 4ஆவது நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து 4 விக்கெட் இழப்பிற்கு 132 ஓட்டங்கள் எடுத்திருந்தது. தாவித் மலன் 28 ஓட்டங்களு டனும், பேர்ஸ்டோவ் 14 ஓட்டங் களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று ஐந்தாவது நாள் ஆட்டம் ஆரம்பமாகியது. மழை காரணமாக காலையில் ஆட்டம் ஆரம்பமாவதில் தாமதம் ஏற்பட்டது. மதிய உணவு இடைவேளை வரை



ஆட்டம் தொடங்கவில்லை. மதிய உணவு இடைவேளைக்குப் பின் ஆட்டம் தொடங்கியது.

ஆட்டம் தொடங்கியதும் பேர்ஸ் டோவ் 14 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். அடுத்து வந்த மொயீன் அலி 11 ஓட்டங்களுடனும், கிறிஸ் வோக்ஸ் 22 ஓட்டங்களுடனும், ஓவர் டன் 12 ஓட்டங்களுடனும், பிராட் ஓட்டங்கள் எவையும் எடுக்காமலும், தாவித் மலன் 54 ஓட்டங்கள் எடுத் தும் ஆட்டமிழக்க இங்கிலாந்து 2ஆவது இன்னிங்ஸில் 218 ஓட்டங்களுடன் சுருண்டது.

இதனால் ஆஸ்திரேலியா இன் னிங்ஸ் மற்றும் 41 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டி கள் கொண்ட டெஸ்ட் தொடரை 3:0 என ஆஸ்திரேலியா கைப்பற்றித் தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான 4ஆவது டெஸ்ட் மெல்போர்னில் 26ஆம் திகதி 'பொக்சிங் டே' டெஸ்ட் ஆக இடம்பெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

---

**ஆஷஸ் தொடர்:**

## 6 இன்னிங்ஸில் 5 முறை நாதன் லயன் சாதனை

ஆஷஸ் தொடரில் இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 3 டெஸ்டில் 5 முறை மொயீன் அலியை நாதன் லயன் வீழ்த்தி வியப்பை ஏற்படுத்தியுள்ளார்.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்றது.

இந்த டெஸ்டில் ஒரு வேடிக்கை என்னவெனில், இங்கிலாந்து சகலதுறை ஆட்டக்காரர் மொயீன் அலி மூன்று போட்டிகளில் 6 இன்னிங்ஸில் துடுப் பாட்டம் செய்துள்ளார். இதில் 5 முறை ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளரான நாதன் லயன் பந்தில் ஆட்டம் இழந்துள்ளார்.

பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் மொயீன் அலி 38,40 ஓட்டங்களும், அடிலெய்டில் நடைபெற்ற பகல் - இரவு டெஸ்ட் ஆட்டத்தில் 25, 2 ஓட்டங்களும், பேர்த்தில் நடைபெற்ற ஆட் டத்தில் வரும் 3ஆவது டெஸ்டின் 2ஆவது இன் னிங்ஸில் 11 ஓட்டங்கள் எடுத்து லயன் பந்தில் ஆட்டம் இழந்தார். முதல் இன்னிங்ஸில் ஓட்டங்கள் எவையும் எடுக்காமல் கம்மின்ஸ் ஆட்டமிழந்தார்.

வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆஸ்திரேலிய ஆடுகளத்தில் சுழற்பந்து வீச்சுக்கு மொயீன் அலி திணறுவது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.





## ஆஸியில் அதிக தோல்வி; மோசமான சாதனையில் சச்சினுடன் இணைந்த குக்

ஆஸ்திரேலிய மண்ணில் அதிக தோல்விகளை சந்தித்த வீரர்கள் என்ற மோசமான சாதனையில் சச்சினுடன் அலஸ்டைர் குக் இணைந்துள்ளார்.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து இடையிலான ஆஷஸ் தொடரின் 3ஆவது டெஸ்ட் பேர்த்தில் நடைபெற்றது. இதில் ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் மற்றும் 41ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

இங்கிலாந்து தொடர்ந்து மூன்று தோல்விகளைச் சந்தித்துள்ளது. அந்த அணியின் முன்னாள் கப்ட னும் அனுபவ வீரருமான அலஸ்டைர் குக்கிற்கு இது 150ஆவது டெஸ்ட் ஆகும். சிறப்புமிக்க இந்த டெஸ்டில் குக் 7, 14 என சொற்பஓட்டங்களில் ஆட்டம் இழந்து ஏமாற்றம் அளித்தார்.

அத்துடன் அலஸ்டர் குக் ஆஸ்திரேலியாவில் தோற்கும் 14ஆவது டெஸ்ட் இதுவாகும். இதன் மூலம் ஆஸ்திரேலிய மண்ணில் அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாடி தோல்வியை சந்தித்த வீரர்கள் பட்டியலில் இணைந்துள்ளார்.

இதற்கு முன் சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), சர் ஜேக் ஹோப்ஸ் (இங்கிலாந்து) ஆகியோர் 14 டெஸ்டில் தோல்விகளை சந்தித்துள்ளனர். பிரைன் லாரா (மேற்கிந்தியத்தீவு) 13 டெஸ்டில் தோல்விய டைந்து 2ஆவது இடத்திலும், வில்ப்ரெட் ரோட்ஸ் (12), ஜேம்ஸ் அண்டர்சன் (12) 3ஆவது இடத்தி லும் உள்ளனர்.

## 4 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார் ஷிகர் தவான்

இந்திய தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவான் 62 ஓட்டங்கள் எடுத்த போது ஒரு நாள் போட்டியில் 4 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். இந்த மைல் கல்லை அதிவேகமாக எட்டிய 6ஆவது வீரர் தவான் ஆவார்.

இலங்கை வீரர் தரங்க ஒரு நாள் போட்டியில் இந்த ஆண்டு ஆயிரம்ஓட்டங்களைக் (25 ஆட் டங்களில் ஆயிரத்து 11ஓட்டங்கள்) கடந்த 3 ஆவது வீரர் என்ற சிறப்பைப் பெற்றார். ஏற்க னவே இந்தியாவின் விராட் கோஹ்லி (ஆயிரத்து 460 ஓட்டங்கள்), ரோகித் சர்மா (ஆயிரத்து 293 ஓட்டங்கள்) ஆயிரம் ஓட்டங்களைக் கடந்திருக் கிறார்கள்.




இந்திய தொடக்க ஆட்டக்காரர் ஷிகர் தவான் 62 ஓட்டங்கள் எடுத்த போது ஒரு நாள் போட்டியில் 4 ஆயிரம் ஓட்டங்களைக் (95ஆவது இன்னிங்ஸ்) கடந்தார். இந்த மைல்கல்லை அதிவேகமாக எட்டிய 6ஆவது வீரர் தவான் ஆவார்.

2017ஆம் ஆண்டில் இந்திய அணியின் ஒரு நாள் போட்டி பயணம் நேற்றுமுன்தினம் நிறை வடைந்தது. இந்திய அணி இந்த ஆண்டில் 29 ஆட்டங்களில் பங்கேற்று 21 இல் வெற்றியும், 7 இல் தோல்வியும் கண்டுள்ளது. ஒரு ஆட்டத்தில் முடிவில்லை. இந்த ஆண்டில் அதிக வெற்றிகளை ருசித்த அணி இந்தியாதான். அதே சமயம் இலங்கை அணி 29 ஆட்டங்களில் விளையாடி 5இல் மட்டுமே வெற்றி பெற்றிருக்கின்றது.

# 2018 FIFA உலகக் கிண்ணத்திலிருந்து ஸ்பெயின் அணி நீக்கப்படும் அபாயம்



ஸ்பெயின் உதைபந்து சம்மேளனத்தில் இடம் பெறும் அரசியல் தலையீடு தொடர்பாக சர்வதேச உதைபந்து சம்மேளனம் எச்சரிக்கை விடுத்திருக்கும் நிலையில், ஸ்பெயின் அணி 2018 FIFA உலகக் கிண்ண உதைபந்து போட்டியில் பங்கேற்பது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

ஸ்பெயின் உதைபந்து சம்மேளனத்தின் புதிய தலைவரைத் தேர்வு செய்யும் வாக்கெடுப்பில் அந்நாட்டு அரசு தொடர்ந்து தலையிட்டால் அடுத்த உலகக் கிண்ண போட்டியில் ஸ்பெயினுக்குத் தடை விதிக்கப்படும் என்று சர்வதேச உதைபந்து சம்மேளனம் (FIFA) அறிவித்துள்ளது.

ஸ்பெயின் உதைபந்து சம்மேளனத்தின் தலைவராக இருந்த ஏஞ்சல் மரியா வில்லார் ஊழல் குற்றச்சாட்டில் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பின் கடந்த ஜூலை தொடக்கம் இடைக்காலத் தலைவராக ஜுவான் லுவிஸ் லர்ரி செயற்பட்டு வருகிறார்.

எனினும், புதிய தலைவரைத் தேர்வு செய்வதற்கான பரிந்துரைக்கப்பட்ட வாக்கெடுப்பு இன்னும் முன்னெடுக்கப்படவில்லை. அந்தப் பதவிக்கு ஸ்திரமான ஒருவரை நியமிப்பதற்கான வாக்கெடுப்பை நடத்துவது தொடர்பாக ஸ்பெயின் உதைபந்து சம்மேளனத்துடன் அந்நாட்டு அரசின் தேசிய விளையாட்டுச் சபை தொடர்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் FIFA வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் கூறியிருப்பதாவது, ஸ்பெயின் உதைபந்து சம்மேளனத்தின் நிலைமை தொடர்பாகக் கவலை வெளியிடும் கடிதம் ஒன்றை FIFA அனுப்பியதை எம்மால் உறுதி செய்ய முடியும். உறுப்பினராக இருக்கும் அனைத்துச் சங்கங்களும் தமது விவகாரங்களை சுதந்திரமாகக் கையாளவேண்டும் என்பதை அந்தக் கடிதத்தில் உணர்த்தப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்மேளனங்களின் உள்விவகாரங்களில் மூன்றாம் தரப்பின் வெளித்தலையீடுகள் இல்லை என்பதை அனைத்துச் சம்மேளனங்களும் உறுதி செய்ய வேண்டும். அடுத்த சில வாரங்களில் FIFA மற்றும் UEFA உறுப்பினர்கள் மெட்ரிட்டுக்கு பயணித்து அங்குள்ள நிலைமை தொடர்பாக ஆய்வு நடத்தும் என்றும் FIFA அறிவித்துள்ளது.

ஸ்பெயின் உதைபந்து சம்மேளனத்தின் புதிய வாக்கெடுப்புக்குள் அரசின் விளையாட்டு திணைக்களம் அழுத்தம் கொடுப்பது தொடர்பிலேயே FIFA கவலை அடைந்திருக்கின்றது என ஸ்பெயின் செய்திப் பத்திரிகையான ‘எல் பயிஸ்’ குறிப்பிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற உலகக் கிண்ண அணிகளை குழு நிலை பிரிக்கும் நிகழ்வின் போது ஸ்பெயின் உதைபந்து சம்மேளன தலைவர் லர்ரி இது தொடர்பாக FIFA உறுப்பு நாடுகளுடன் பேச்சு நடத்தியது என ஸ்பெயின் உதைபந்து சம்மேளனம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண போட்டியில் ஆடுவதில் இருந்து ஸ்பெயின் தடுக்கப்படும் ஆபத்து இருக்கின்றது என நான் கருதவில்லை என்று ஸ்பெயின் பிரதமர் மரியானோ ரஜோய் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், உதைபந்து சம்மேளனங்களின் உள்விவகாரங்களில் அரசியல் தலையீடு இருப்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில், உலக உதைபந்து சம்மேளனத்தால் எந்த ஒரு தேசிய அணிக்கும் தடை விதிக்க முடியும்.

அரசியல் தலையீடு தொடர்பான குற்றச்சாட்டில் கடந்த ஒக்ரோபரில் பாகிஸ்தான் உதைபந்து சம்மேளனத்திற்கு FIFA தடை விதித்ததோடு, இதே குற்றச்சாட்டில் குவைத், சூடான் நாடுகளும் முன்னதாக FIFA வின் தடைக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

## ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை: இரட்டை சதத்தால் 5ஆம் இடத்தில் ரோகித் சர்மா

மொகாலியில் இலங்கைக்கு எதிராக இரட்டை சதம் அடித்த ரோகித் சர்மா ஒருநாள் கிரிக்கெட் துடுப்பாட்ட தரவரிசையில் 5ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தியா - இலங்கை இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நேற்று முன்தினம் முடிவடைந்தது. இதில் இந்தியா 2:1 என வெற்றிபெற்றுத் தொடரைக் கைப்பற்றியது. மொஹாலியில் நடைபெற்ற 2ஆவது ஒரு நாள் போட்டியில் ரோகித் சர்மா இரட்டை சதம் அடித்தார். அவர் 208 ஓட்டங்கள் குவித்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்த இரட்டை சதத்தால் ஐ.சி.சி. துடுப்பாட்ட தரவரிசையில் ரோகித் சர்மா 7ஆவது இடத்தில் இருந்து 5 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார். விராட் கோஹ்லி முதல் இடத்திலும், ஏ.பி. டி வில்லியர்ஸ் 2ஆவது இடத்திலும், டேவிட் வோர்னர் 3 ஆவது இடத்திலும், பாபர் ஆசம் 4ஆவது இடத்திலும், ரோகித் சர்மா 5ஆவது இடத்திலும் உள்ளனர். ஜோ ரூட் 1 இடங்கள் பின்தங்கி 7ஆவது இடத்தில் உள்ளார்.

பந்து வீச்சு தரவரிசையில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஹசன் அலி 759 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், இம்ரான் தஹிர் 2ஆவது இடத்திலும், பும்ரா 3ஆவது இடத்திலும், ஹசில்வுட் 4ஆவது இடத்திலும், ரபாடா 5ஆவது இடத்திலும் உள்ளனர்.

அணிகள் தரவரிசையில் இந்தியா ஒரு புள்ளியை இழந்து 119 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. தென்னாபிரிக்கா 121 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது.




## இந்தியா தொடர்ச்சியாக வென்ற 8 தொடர்கள்




இலங்கை அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரை இந்தியா 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதன் மூலம் தொடர்ச்சியாக 8ஆவது தொடரை வென்று முத்திரை பதித்தது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஸிம்பாப்வேக்கு எதிரான தொடரை 3:0 என்ற கணக்கில் வென்றது. அதில் இருந்து இந்திய அணி தொடரை இழக்காமல் தொடர்ச்சியாக 8ஆவது தொடரை வென்று சாதனை புரிந்தது. இதில் நியூஸிலாந்து, இலங்கை அணிகளுக்கு எதிராக தலா 2 முறை வென்று இருந்தது. இந்த 8 தொடரில் 3 தொடர் வெளிநாட்டில் (ஸிம்பாப்வே, மேற்கிந்தியத்தீவு, இலங்கை) கைப்பற்றியது. மீதியுள்ள 5தொடரை சொந்த மண்ணில் வென்றமை குறிப்பிடத்தக்கது.

## மேயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர சபையின் மேயர் வேட்பாளர் ஆர்னோல்ட் தான் என்ற தகவலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரால் இயக்கப்படும் நாளிதழ் நேற்றுத் தலைப்புச் செய்தியாக உறுதிப்படுத்தி வெளியிட்டிருந்தமை குறித்து செய்தியாளர்கள் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலையில் இந்த உறுதிப்படுத்தலை சுமந்திரன் வெளியிட்ட பின்னர் அதனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா எம்.பி. மறுத்துரைத்தார். அப்படி எந்த முடிவும் கட்சியில் எடுக்கப்படவில்லை என்றார் அவர். அத்தோடு கட்சியின் சார்பில் அதனைத் தெளிவுபடுத்தி அறிக்கையும் வெளியிடப்பட்டது.

இதனையடுத்து மீண்டும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனிடம் இது தொடர்பாக வினவிய போது, அவர் தமது காலை நிலைப்பாட்டை மீள உறுதிப்படுத்தினார்.

“நாம் சர்ச்சைகளைத் தவிர்ப்பதற்காகவே இதனை முற்கூட்டியே கூற முற்படவில்லை. வடக்கு, கிழக்கில் பல மாநகர சபைகள் உள்ளன. அவற்றின் முதல்வர் வேட்பாளர் யார் என்று கேட்பார்கள்.

ஆனால் நீங்கள் (பத்திரிகையாளர்கள்) கேட்டமையால் நான் அதனைக் கூறினேன். இது விதிவிலக்கான செயற்பாடாகும்.

ஆர்னோல்ட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ். மேயர் வேட்பாளராகத் தெரிவு செய்திருக்கின்றது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தலைமை வேட்பாளர் யார் என்பதை வெளிப்படுத்துவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், ஆனோல்ட் மாகாண சபை உறுப்பினராக இருந்தமையால் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதனால் அவர் தமது மாகாண சபை உறுப்பினர் பதவியை உரிய காலத்திற்குள் இராஜினாமாச் செய்ய வேண்டும். அதனால் யாழ். மாநகர சபையின் தலைமை வேட்பாளர் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தியிருக்கின்றோம். - என்றார் சுமந்திரன்.

## அப்படித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அறிவிப்பு மூலம் கட்சியின் துணைச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் அறிவிப்பை மறுத்துரைத்தனர் அவர்கள்.

ஆனோல்ட்தான் யாழ். மேயர் வேட்பாளர் எனத் தமிழரசுக் கட்சியின் பத்திரிகை வெளியிட்ட தலைப்புச் செய்தியை அடுத்து நேற்றுக் காலை கருத்து வெளியிட்ட மாவை சேனாதிராசா, “யாழ். மாநகர சபை மேயர் வேட்பாளர் தொடர்பில் கட்சியில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. இது குறித்து கட்சியின் அறிவிப்பு இன்று (நேற்று) வரும்.” - என்றார்.

இதன் பின்னர் கட்சியின் பொதுச்செயலாளர் சி.துரைராஜசிங்கம் உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிட்டார். அதில் கூறப்பட்ட விடயங்கள் வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையே எட்டப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களின் முதல்வர், துணை முதல்வர்களைத் தேர்தல் முடிந்த பின்னரே தீர்மானித்து அறிவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலேயோ வேட்பாளர்கள் சார்பிலேயோ இத்தகைய செய்திகள் எதனையும் வெளியிட்டுத் தேவையற்ற சர்ச்சைகளுக்கு இடமளிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது.

## ஆசனப்பங்கீட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் நேற்றிரவு 7 மணிக்கு ஆரம்பமானது.

உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்திலும் தலைமை வேட்பாளரை நியமிக்கும் உரித்துடைய கட்சிக்கு 60 சதவீதமும் மற்றைய இரண்டு கட்சிகளுக்கும் தலா 20 சதவீதமும் ஆசன ஒதுக்கீடு வழங்கப்படும் எனப் பங்காளிக் கட்சிகளின் தலைமைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாநகர வட்டாரங்களின் அடிப்படையில் புளொட்டுக்கு 2 வட்டாரங்கள் மாத்திரமே தமிழரசுக் கட்சியால் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும், அந்தக் கட்சிக்குச் சேர வேண்டிய மேலும் 3 வட்டாரங்கள் ரெலோவுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் கிளிநொச்சியில் உள்ள சபைகளில் புளொட்டுக்கு அறவே இடமில்லை எனக் கூறப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பில் தமிழரசுக் கட்சியுடன் இடம்பெற்ற பேச்சுக்கள் திருப்தியளிக்காத நிலையில் கூட்டத்திலிருந்து நேற்றிரவு 9 மணியளவில் புளொட் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் வெளியேறினார் என அறிய வந்தது.

## கூட்டமைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி நகர சபையின் வேட்பாளர் பங்கீடு தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைக்கும், அதிக வேட்பாளர்கள் போட்டியிடவேண்டுமென்ற எண்ணமே காரணம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் ஒவ்வொரு வட்டாரத்திலும் யாரை நிறுத்துவதென பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் பேச்சு நடைபெற்று வருகிறது. வேட்பாளர்களாகப் போட்டியிட பலர் ஆர்வம்காட்டுகின்றமையால் தீர்மானம் எடுப்பதில் சிரமம்.

எனினும், அநேகமான உள்ளூராட்சிச் சபைகளுக்கான வேட்பாளர் பட்டியல் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளது. சில இடங்களில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டியுள்ளமையால் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

வேட்பாளர்களாக வரவேண்டியவர்கள் குறித்து மக்களும் எங்களைத் தொடர்புகொண்டு பேசுகின்றனர். வேட்பாளர்கள் பங்கீடு தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்படும் - என்றார். (ஐ)

## கடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்தை மாகாண சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அவைத் தலைவரிடம் கையளித்திருக்கின்றார்.

அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் இந்தத் தகவலை நேற்று ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

அவருடைய இராஜினாமாக் கடிதம் அங்கீகரிக்கப்பட்டு நேற்று தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்கு பேரவைச் செயலாளரினால் அனுப்பிவைக்கப்படவிருந்தது என்று அவைத் தலைவர் குறிப்பிட்டார். (உ)

## இறுதிப்போரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையை விடுத்துள்ளனர்.

தமிழர் தாயகப் பகுதியில் யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் குறித்த உண்மையை வெளிப்படுத்துமாறு கோரி மக்களினால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள், 300 நாள்களை கடந்துள்ளன. இந்நிலையில், இலங்கை ஜனாதிபதிக்கும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

300 நாள்கள் கடந்துள்ள போதும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் எவ்வித காத்திரமான முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்படவில்லையெனப் பிரிட்டனின் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற குழுவின் தலைவர் போல் ஸ்கூலி தெரிவித்துள்ளார்.

எனினும், அச்சுறுத்தல்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் வயதான காலத்திலும் இம்மக்கள் மனத் தைரியத்தைக் கைவிடாமல் போராடி வருகின்றமை பாராட்டத்தக்க விடயமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல பாதிப்புக்களைச் சந்தித்த தமது நாட்டுப் பிரஜைகளின் மீது அரசு காட்டும் பாகுபாடானது அதிர்ச்சியூட்டுவதாக அமைந்துள்ளதென்றும் அவர் கூறினார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களுக்கான போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், போராட்டத்தில் ஈடுபட்ட 7 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், காணாமற்போனோர் விடயத்தில் தான் விரைந்து செயற்படுகின்றார் என கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார். எனினும் ஜனாதிபதியின் வாக்குறுதி நிறைவேற்றப்படாமை துரதிஷ்டவசமானதெனவும் பொல்ல் ஸ்கூலி சுட்டிக்காட்டினார்.

இலங்கை அரசின் நீண்ட கால வாக்குறுதியான காணாமற்போனோர் செயலகத்தை அமைக்கும் நடவடிக்கை இழுத்தடிக்கப்படுவதானது, உறவினர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதென்றும், சரணடைந்தவர்களின் பெயர் பட்டியலை இனியும் தாமதிக்காது உடன் வெளியிட வேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார். (ஐ)

## ஆசனப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை நண்பகல் 12 மணியாகும்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளான தமிழரசுக் கட்சி, புளொட் மற்றும் ரெலோ ஆகியவற்றின் உயர்மட்டத்தினர் நேற்றிரவு 7 மணி முதல் சுமார் 2 மணிநேரம் ஆசன ஒதுக்கீடுகள் தொடர்பில் யாழ் மாட்டின் வீதி அலுவலகத்தில் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் கிளிநொச்சியில் மூன்று பிரதேச சபைகளுக்குமான ஆசனப் பங்கீட்டில் புளொட்டுக்கு அநீதியிழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அந்தக் கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

இந்த நிலையில் ஆசனப் பங்கீடுகள் இறுதி செய்யப்படாமலேயே நேற்றைய கூட்டம் நிறைவடைந்தது. இன்றும் பேச்சுக்கள் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பெப்ரவரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கான வேட்பு மனுக்களை ஏற்கும் பணி நேற்றுக் காலை ஆரம்பமானது. எதிர்வரும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை வேட்பு மனுக்களைக் கையளிக்க முடியும்.

இந்த நிலையில் தேர்தலுக்கான திகதி நேற்று அறிவிக்கப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே மஹிந்த தேசப்பிரிய இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடத்தப்படும். பெப்ரவரி மாதம் ஆறாம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்த முடியாது.

இந்த நிலையில், சனிக்கிழமை தினமொன்றை எடுப்பதானால், பெப்ரவரி 10 அல்லது 17 ஆகிய இரு நாள்களையே எடுக்க முடியும். இல்லாவிட்டால் பெப்ரவரி 8 அல்லது 12 ஆகிய திகதிகளில் ஒன்றை எடுக்க வேண்டும்.

இந்த நான்கு நாள்கள் தொடர்பில் மிகவும் தீவிர கலந்துரையாடல்களை நடத்தி, பெப்ரவரி 10 ஆம் திகதி தேர்தலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

எனினும், தேர்தல் நடைபெறும் தினம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 26ஆம் திகதியே வெளியிட முடியும். அதுவரை இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட முடியாது.

ஏனெனில், தேர்தல் அறிவிப்பு, தேர்தல் நடத்தப்படுவதற்கு 35 நாள்களுக்கு அதிகமாகவும் 49 நாள்களுக்கு குறையாமலும் இருக்கவேண்டும் என்ற வரையறையைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது - என்றார். (ஐ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் போராளி உட்பட மூவரைப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது சுமார் 70 லட்சம் ரூபா பெறுமதியுடைய தங்க நகைகளும் பைக்கோ இயந்திரமும் புதுக்குடியிருப்பு பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - விசுவமடுப் பிரதேசத்தில் யுத்தக் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் புதைக்கப்பட்ட தங்க நகைகளைப் பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் முன்னாள் போராளி உட்பட மூவர் தோண்டியுள்ளனர்.

பைக்கோ இயந்திரத்தின் உரிமையாளர் இயந்திரத்தைக் காணவில்லை எனப் பொலிஸில் முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

இதன் பின்னர் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டமையுடன் அவர்களிடமிருந்து 70 லட்சம் ரூபா பெறுமதியுடைய தங்க நகைகளும் பைக்கோ இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த ராசரத்தினம் கார்பதிவர்ணன் (வயது 33), நவரத்தினம் ரூபன் (வயது 22), பெருமாள் பிரகாஷ் (வயது 21) ஆகிய மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் எனப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் எம்.ஏ.சுமந்திரனிடம் வடமாகாண முதலமைச்சர் நேற்று முன்தினம் யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் கட்சிகளைப் பார்க்காமல் வேட்பாளர்கள் சிறந்தவர்களா, மக்களுக்கு சேவையாற்ற கூடியவர்களா என்பதைப் பார்த்து வாக்களிக்க வேண்டும்.” எனக் கூறிய கருத்துத் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்கும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது மேலும் அவர் கூறுகையில் -

முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனின் கருத்துக்களுக்கு ஒரு போதும் நான் பதிலளிக்கமாட்டேன். மேலும் கடந்த காலத்தை விட இப்போது அதிகளவானவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு முன் வருகிறார்கள். இதனால் தீர்மானங்களை எடுப்பது கடினமாக இருக்கின்றது.

சாவகச்சேரி தொகுதியிலும் பிரச்சினை எழுந்தது. அது தற்போது தீர்க்கப்பட்டிருக்கின்றது. மேலும் இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியடையும். தேர்தலில் போட்டியிடுவதற்கு பலர் விரும்பி முன் வருவதை அவதானிக்கும்போது அது தெரிகிறது. - என்றும் மேலும் தெரிவித்தார்.

## சந்திரகுமாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் சார்பில் இந்த வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகளுக்குமான வேட்பு மனுவை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையிலான சமத்துவம், சமூகநீதிக்கான மக்கள் அமைப்பு சுயேச்சைக் குழுவாகத் தாக்கல் செய்துள்ளது.

கிளிநொச்சி சித்தி விநாயகர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்ட குறித்த அமைப்பினர் பேரணியாகக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல்கள் திணைக்களத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளனர்

இந்நிலையில் மக்கள் ஒரு வினைத்திறன் மிக்க பிரதேச சபையை ஏற்படுத்த விரும்புகின்றனர் எனவும் கடந்த காலங்கள் போன்று பிரதேச சபைகளின் செயற்பாடுகள் இருக்ககூடாது என மக்கள் கருதுகின்றனர் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

எனவே நாம் பிரதேச சபைகளின் அதிகாரத்திற்கு வருகின்ற போது மக்களின் விருப்பத்திற்கு அமைவாக வினைத்திறன் உள்ள சபைகளாக அவற்றை மாற்றிச் செயற்படுத்திக் காட்டுவோம் எனத் தெரிவித்த அவர், கடந்த காலத்தில் மாவட்டத்தில் எங்களுடைய செயற்பாடுகள் வினைத்திறன் மிக்கனவாக இருந்ததன் காரணமாகவே மக்கள் மத்தியில் எமக்கான ஆதரவு தளமும் அதிகம் காணப்படுகிறது எனவும் தெரிவித்தார். (ஐ)

## சிவசேனை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களுக்கு வாக்களிக்கவேண்டும் என்று தெரிவித்து சிவசேனை என்ற அமைப்பின் பெயரில் உரிமை கோரப்பட்ட யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஐ)

# வடக்கு இளைஞர்களைத் தூண்டிவிடாமல் வேலையில்லாப் பிரச்சினையைத் தீருங்கள்

## மாகாண ஆட்சியாளர்களிடம் டக்ளஸ் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ.19

வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்புகளில் மத்திய அரசைப் போன்றே, மாகாண அரசினாலும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். இதற்கெதிராக எமது இளைஞர்கள் – யுவதிகள் கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்த முயற்சிகள் மற்றும் போராட்டங்கள் மத்திய அரசைப் போன்றே மாகாண அரசினாலும் புறந்தள்ளப்பட்டிருந்த நிலையையே காணக்கூடியதாக இருந்தது. இந்த நிலையில், சுயலாப அரசியல் நோக்கங்களுக்காக மீண்டும் எமது இளைஞர், யுவதிகளைத் தூண்டிவிட்டு, அதன் மூலமாகக் குளிர்காய முயலாமல், இன்றைய மத்திய மற்றும் மாகாண ஆட்சிஅதிகாரத்தில் இருப்பவர்கள், வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளது முக்கியப் பிரச்சினையாகவுள்ள வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன் வரவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண இளைஞர், யுவதிகள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி)யின் யாழ் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாண இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கடந்த காலங்களில் நாம் இயன்றளவு நடவடிக்கைகளை எடுத்திருந்தோம். தொடர்ந்து நாம் அரசியல் அதிகாரத்தில் பலம் பெற்றிருந்தால் மேற்படி பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலான எமது நடவடிக்கைகள் படிப்படியாகத் தொடர்ந்திருக்கும்.

தற்போதைய நிலையில், எமது இளைஞர், யுவதிகளுக்கான அரச வேலைவாய்ப்புகள் மத்திய அரசில் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நிலையில் தான், நாம் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவால் கொண்டு வரப்பட்ட, சில காலம் செயற்படுத்தப்பட்டிருந்த 1990/15ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச தொழில் வாய்ப்புகளில் இனவிகிதாசாரம் பேணப்பட வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

அதே நேரம், வடக்கு மாகாண சபையாலும் எமது இளை ஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புப் பிரச்சினையை போதியளவு தீர்க்க முடியும். பல்வேறு வேலை வாய்ப்புகளை அருவாக்க முடியும். இருந்தும் அத்தகைய முயற்சிகள் எவையும் இதுவரையில் நடைபெற்றிராததும் எமது இளைஞர்களது பல்வேறு பிரச்சினைகளுக்குக் காரணமாகவுள்ளன.

எமது மக்களின் வேலை வாய்ப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதானது, எமது இன உரிமையை அடகு வைப்பதாகாது. வேலைவாய்ப்பு என்பது எமது மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். எனவே, எமது இளைஞர்களது எழுச்சியானது தங்களது அடிப்படை மற்றும் ஏனைய உரிமைகளை மறுக்கின்ற – உதாசீனம் செய்கின்ற அனைத்துத் தரப்பினருக்கும் எதிரானதாகவே இருக்க வேண்டும். அது மத்தியானம் சரி, மாகாண மானாலும் சரி. எங்கெங்கு எமது மக்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றனவோ, அங்கெல்லாம் உரிமைப் போராட்டங்கள் எழ வேண்டிய நிலையையே ஆட்சி அதிகாரங்களில் இருக்கின்றவர்கள் உருவாக்கி வருகின்றனர் – என்றார். (ஐ)

# காணாமற்போன மீனவர் பாதுகாப்பாக இந்தியாவில்!



காணாமற்போன மீனவர் ஒருவர் உயிருடன் இருக்கின்றனர் என்பதை அறிந்து அவரது குடும்பம் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

கடலில் அடித்துச் செல்லப்பட்ட அவரின் சடலம் மீண்டும் கரைக்கு வரும் என 10 நாள்களாகக் காத்திருந்த உறவினர்களுக்கு மகிழ்ச்சியான தகவல் கிடைத்துள்ளது.

மன்னார் பேசாலைப் பிரதேசத்தில் கடலுக்குச் சென்று காணாமற்போன மீனவர் ஒருவர், 10 நாள்களின் பின்னர் இந்திய மீனவர்களால் காப்பாற்றப் பட்டு இராமேஸ்வரம் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு ள்ளார்.

அந்தோனி மரியதாஸ் என்ற 37 வயதுடைய இந்த மீனவர் கடந்த 7ஆம் திகதி மேலும் மூன்று மீனவர்களுடன் கடலுக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் கடல் அலையில் சிக்கிக்காணா மற்போனார்.

மரியதாஸ் கடலில் மூழ்கியமை தொடர்பில் சக மீனவர்களால் அவரின் குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவம் அறிந்த நாளில் இருந்து மரியதாஸின் சடலம் கரை ஒதுங்கும் என குடும்பத்தினர் பேசாலைக் கடற்கரையில் காத்திருந்தனர்.

சூறாவளியில் சிக்கி கட லில் விழுந்த மரியதாஸ் கடலில் மிதந்து தென் இந்தியா வுக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் இந்திய மீனவர்கள் அவரைக் காப்பாற்றியுள்ளனர்.

அதன் பின்னர் அவர் உயிருடன் இருக்கின்றார் என குடும்பத்தினரிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. அவரை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# பொலிஸாரினால் தேடப்பட்டவர் முல்லைத்தீவில் வைத்துக் கைது

முல்லைத்தீவு, டிசெ. 19

பொலிஸாரால் தேடப்பட்டு வந்தகுற்றவாளி ஒருவரை முள்ளியவளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வாரம் முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் நகைக் கடை ஒன்றில் நகைகளைத் திருடிய ஒருவரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்தனர்.


அவர் மீது வவுனியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இளவாலையைச் சேர்ந்த இவர் தண்ணீரூற்றுப் பகுதியில் உள்ள நகைக் கடை ஒன்றில் நகையை திருடினார் எனக் கூறப்பட்டது.

கடந்த 15 ஆம் திகதி அவரைக் கைது செய்த முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதில் திருட்டு சம்பவத்தை ஒப்புக்கொண்டதுடன் இவருக்கு உதவி புரிந்த மேலும் நால்வரும் கைது செய்யப்பட்டு கடந்த 16 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

உதவி புரிந்த நால்வரும் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் திருடினார் எனக்குற்றஞ்சாட்டப்பட்டவரை எதிர் வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். (ஐ)

# பஸ்ஸை மறித்து தாக்கிய யானை



கொழும்பு, டிசெ.19

புத்தள – கதிர்காமம் வீதியின் கோனகங்ஹார கல்கே பிரதேசத்தில் கதிர்காமத்திற்கு யாத்திரை சென்ற பஸ் மீது காட்டு யானை தாக்கியுள்ளது.

மூன்று யானைகளைக் கொண்ட குழுவில் ஒரு யானை பஸ்ஸைத் தாக்கியுள்ளது. தாக்குதலில் சாரதி ஆசனத்திற்கு அருகில் இருக்கும் கதவு மற்றும் யன்னல்கள் சேதமடைந்துள்ளன.

புத்தள – கதிர்காமம் வீதியில் பஸ் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென காட்டில் இருந்து மூன்று யானைகள் வீதிக்கு வந்துள்ளன.

ஒரு யானை வீதியை குறுக்காக மறித்துக் கொண்டதும், மற்றுமொரு யானை பஸ்ஸில் உள்ளவர்களிடம் உணவை கேட்டுள்ளது.

அதில் இருந்த பயணிகள், விளாம்பழம் போன்ற பழங்களை கொடுத்தபோதிலும் யானை அவற்றை வாங்க மறுத்துள்ளது.

பஸ்ஸில் பயணித்த பெண்ணொருவரின் பொதியை எடுத்த யானை அதில் இருந்த சோற்றை உண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# கூரிய ஆயுதங்களுடன் லொறியில் 11 பேர் கைது

கொழும்பு, டிசெ 19

கூரிய ஆயுதங்களுடன் லொறி ஒன்றில் பயணித்த 11 பேர் பண்டாரவெல பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்கள் நேற்று முன் தினம் இரவு பண்டாரவெல நகரத்தில் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் தியத்தலாவை, ஹால்துமுல்ல, பண்டாரவெல, அம்பலாங்கொடை, குளியாப்பிட்டிய, கரந்தகொள்ள, பிபிலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் கைது செய்யப்பட வேளையில் வாள், கத்தி மற்றும் இரும்பு கம்பிகள் உட்பட பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



# லலித் வீரதுங்கவிடம் பொலிஸ் விசாரணை

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க பொலிஸ் தலைமையகத்தின் விசேட விசாரணைப் பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கடந்த அரசின் காலத்தில் எட்டு வாகனங்களைச் சந்தை விலையை விட இரண்டு மடங்கு அதிகமான விலைக்குக் கொள்வனவு செய்த சம்பவம் தொடர்பாக லலித் வீரதுங்கவிடம் வாக்கு மூலம் பெறப்பட்டது எனத் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த அரசில் பதவி வகித்த ஒருவரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

லலித் வீரதுங்க, அனுபெல்பிட்ட ஆகியோர் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரசாரத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் அரச பணத்தில் சில் துணிகளை விநியோகித்த குற்றச்சாட்டில் கைதாகிப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சு.கவை அழிக்கும் முயற்சி படுதோல்வி

## பிரதியமைச்சர் மனு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19

தாமரை மொட்டுச் சின்னத்தில் வந்து சுதந்திரக் கட்சியை சின்னாப்பின்னப் படுத்த மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன எனவும், கட்சி வலுவாக முன்னோக்கி செல்லும் எனவும் பிரதியமைச்சர் மனு நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய காலி மாவட்ட செயலகத்திற்கு நேற்று வந்தபோதே அவர் இதனைக் கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:


சுதந்திரக் கட்சியை சின்னாப்பின்னப் படுத்தி அழிக்க சிலர் முயற்சித்தனர். அந்த முயற்சி தோல்வியடைந்து கட்சி வலுவடைந்துள்ளது. கட்சியைப் பிளவு படுத்த நினைத்தவர்களின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. சுதந்திரக்கட்சியைப் பிளவுபடுத்த முயற்சிப்பவர்களுக்கு உள்நோக்கம் இருக்கின்றது.

வேறு நபர்கள் ஆட்சியமைக்கும் சூழலை ஏற்படுத்துவதே அந்த உள்நோக்கம். எனினும், அந்த முயற்சியை தோற்கடித்து எம்மால் கட்சியை வலுப்படுத்த முடிந்துள்ளது. கட்சி என்ற வகையில் தேசிய தலைமைத்துவத்தில் இருந்து கிராம மட்டம் வரை வலுவான ஒருங்கமைப்பின் கீழ் முன்னோக்கி செல்ல இயலுமை கிடைத்துள்ளது.

எமது கட்சியில் இருந்து விலகியுள்ள தலைவர்கள் மீண்டும் கட்சியுடன் இணைய ஆரம்பித்துள்ளனர். அதேபோல் வேறு கட்சிகளில் தலைமை பதவிகளில் இருந்தவர்களும் சுதந்திரக் கட்சியில் இணைந்து வருகின்றனர்.

இந்த அனைத்து விடயங்களை நோக்கும் போது தேர்தலை எதிர்கொள்வதில் சுதந்திரக்கட்சி வலுவாக இருக்கின்றது என்பது தெளிவு.

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி ஒருவர் நாட்டை ஆட்சி செய்யும் நேரத்தில் கிராமங்களின் அதிகாரமும் கட்சிக்கு கிடைக்கும் என்பது உறுதி – என்றார். (ஐ)




# விவசாயச் செய்கைகளுக்கான இழப்பீட்டுக் காப்புறுதித் திட்டம்

## நாளை முதல் நடைமுறைக்கு

கொழும்பு, டிசெ.19

விவசாயச் செய்கை இழப்பீட்டுக் காப்புறுதித் திட்டம் நாளை புதன்கிழமை தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த இழப்பீடு இம்முறைவரவு-செலவுதிட்டத்தில் முன்மொழியப்பட்ட வகையில் ஏக்கர் ஒன்றுக்கு 40 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

நெல், சோளம், பெரிய வெங்காயம், கிழங்கு மற்றும் மிளகாய் ஆகிய பயிர்களைச் செய்கை செய்யும் விவசாயிகளுக்கு இந்த உற்பத்தி காப்புறுதி இழப்பீடுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்தத் திட்டத்திற்காக வரவு – செலவுத் திட்டம் மூலம் 300 கோடி ரூபாவை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

வறட்சி, வெள்ளம், மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட ஒரு ஏக்கர் உற்பத்தி காணிக்காக இதுவரை 10 ஆயிரம் ரூபா காப்புறுதி இழப்பீடாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மக்கள் காங்கிரஸுடன் ஐ.தே.க மன்னாரில் இணைந்து போட்டி

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியினர், மன்னார் தேர்தல் அலுவலகத்தில் நேற்று மதியம் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அத்துடன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிஷாத் பதியுதீனின் இணைப்புச் செயலாளர் றிப்கான் பதியுதீன் தலைமையில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் அலிக்கான் செரீப், அமைச்சரின் செயலாளர் முஜாகிர், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.எம்.பஸ்மி ஆகியோரும் சென்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, மன்னார் பிரதேச சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய 5 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

இதேவேளை மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் மாத்திரம் போட்டியிடுவதற்கு சுயேச்சைக் குழு ஒன்று நேற்றுக் காலை மன்னார் தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது. (ஐ)

# பணத்தை மோசடி செய்ததாக தனியார் நிறுவனம் முற்றுகை

## வவுனியாவில் நேற்றுச் சம்பவம்

வவுனியா, டிசெ.19

வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள இலங்கை பண்ணை மற்றும் மீன்பிடி உற்பத்தி ஊக்குவிப்பாளர் கம்பனி நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்து நேற்றுக் காலை அந்த நிதி நிறுவனத்தின் அலுவலகத்தை பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் முற்றுகையிட்டனர்.

அந்த நிறுவனத்தில் உறுப்பினர் ஆகுவதற்கு ஆயிரம் ரூபா செலுத்தப்பட்டது. 10 இலட்சம் ரூபா கடனை ஒரு சதவீத வட்டி அடிப்படையில் பெற்றுக் கொள்ள வேண்டுமாக விருந்தால் ஒரு லட்சம் ரூபா பணம் வைப்பிலிடப்பட வேண்டுமெனவும், 5 லட்சம் ரூபா பணம் தேவைப்படின் 50 ஆயிரம் ரூபா பணம் வைப்பிலிடப்பட வேண்டுமென நிதி நிறுவன ஊழியர்கள் தெரிவித்தனர் எனக் கூறப்பட்டது.

இதனை நம்பி வாடிக்கையாளர்கள் பணத்தை வைப்பிலிட்டுள்ளனர். அதன் பின்னர் வாடிக்கையாளர்களுக்கு அந்தத் தனியார் நிதி நிறுவனத்தால் காசோலைகள் வழங்கப்பட்டன. அந்தக் காசோலைகளை வைப்பிலிடச் சென்ற சமயம் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளதாக வங்கி ஊழியர்கள் தெரிவித்தனர் எனப் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் கூறினர்.

இதனையடுத்து நேற்று பாதிக்கப்பட்ட அனைத்து வாடிக்கையாளர்களும் அந்த தனியார் நிதி நிறுவனத்தினை முற்றுகையிட்டனர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் பாதிக்கப்பட்ட மக்களுடனும், நிதி நிறுவன ஊழியர்களுடனும் கலந்துரையாடினர்.

பாதிக்கப்பட்ட மக்களிடம் முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்ட பொலிஸார், நிதி நிறுவனத்தின் முகாமையாளருடன் தொலைபேசி மூலம் தொடர்பை ஏற்படுத்தி உடனடியாகப் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு தெரிவித்தனர். (ஐ)

# மட்டக்களப்பில் குண்டுகள் மீட்பு

மட்டக்களப்பு–பாவற்கொடிச்சேனை பகுதியில் கைவிடப்பட்ட காணியொன்றில் இருந்து நேற்றுப் பிற்பகல் ஒரு தொகை கைக்குண்டுகளை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர். களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே அந்த இடத்தில் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில், 18 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன எனக் களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.எம். பி.ஜெயகளும் தெரிவித்தார்.

முன்னதாக விடுதலைப் புலிகளின் முகாமாக இருந்து கைவிடப்பட்ட காணியொன் றிலேயே இந்த கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவைப் பெற்று இன்று செவ்வாய்க்கிழமை இக் கைக்குண்டுகள் செயலிழக்கச் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மன்னாரில் சு.க. வெற்றி பெறும்

## மஸ்தான் எம்.பி. நம்பிக்கை

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் ஒரு நகர சபையிலும், 4 பிரதேச சபைகளிலும் வெற்றிபெறுவோம் என சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வவுனியா, வன்னி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஏனைய கட்சிகளுடன் இணைந்தும், சில பகுதிகளில் தனித்து கைச் சின்னத்திலும் தாங்கள் போட்டியிடவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான மன்னார் மாவட்ட வேட்பாளர்கள் தெரிவு தொடர்பில் மன்னாரில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்தில் ஸ்ரீ ரெலோ கட்சியும், முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய காங்கிரஸும் தங்களுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றன எனவும், இது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படவில்லை எனவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

**கடை விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நகரின் மத்தியில் கஸ்தூரியார் வீதியில், முதலாம் மாடியில் வீதிக்குத் துலக்கமான பார்வையுடன் 450 சதுர அடி விஸ்தீரணமுள்ள கடை, மலசலகூடம், சிறிய களஞ்சிய அறை ஆகிய வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:– 078 301 7454

காலைக்கதிர் Kalaikkathir தினசரிப் பத்திரிகையை இங்கே பெற்றுக்கொள்ளலாம்

கோலா சிற்றி – நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
குமார் தேநீரகம் – மானிப்பாய்.
பிள்ளையார் ஸ்ரோர்ஸ் – மட்டுவில்.
பாக்கியா புத்தகசாலை – கொக்குவில்.
V.S மல்ரி சென்ரர் – புத்தூர்
கோபி மல்ரி சென்ரர் – நுணாவில்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்படுகிறது.